விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 197 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 20 திங்கட்கிழமை (04.07.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைக்காக

## சர்வதேசத்தால் முன்னெடுக்கப்படும் எந்தவொரு முயற்சியிலும் தமிழர்கள் உள்ளடக்கப்பட வேண்டும்

### சர்வதேச நாணய நிதியத்துக்கு 6 தமிழ்க் கட்சிகள் கூட்டாக கடிதம்

(கொழும்பு)
இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு சர்வதேச சமூகத் தினால் முன்னெடுக்கப்படும் எந்தவொரு முயற்சியிலும் இலங்கை வாழ் மற்றும் புலம்பெயர் தமிழர்கள் பங்குதாரர்களாக உள்ளடங்கியிருக்க வேண்டும் என ஆறு தமிழ்க் கட்சிகள் இணைந்து சர்வ 15

திருச்சி முகாமிலுள்ள

## 16 ஈழத் தமிழர்களை விடுவித்தது தமிழக அரசு

(சென்னை)
திருச்சி மத்திய சிறைச்சாலை வளா 15

## இந்திய மீனவர்கள் 12 பேர் கைது

(கரணவாய்)
சட்டவிரோதமான முறையில் நாட்டின் கடல் எல்லையை மீறி யாழ்ப்பாணம் - பருத்தித்துறை கடற் 15

எரிபொருள் கொள்வனவு தொடர்பில்

# மலேசியாவுடனான பேச்சுவார்த்தை வெற்றி



### 50 ஆயிரம் மெ.தொன் பெற்றோல் 80 ஆயிரம் மெ.தொன் டீசலுடன் வரவுள்ளது கப்பல்

(கொழும்பு)
மலேசியா எரிபொருள் நிறுவனத்துடன் எரிபொருள் கொள்வனவு தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தை வெற்றியளித்துள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

8 வரை பாடசாலைகளுக்கு

## விடுமுறை

(கொழும்பு)
அனைத்து அரச மற்றும் அரசாங்க அங்கீகாரம் கொண்ட தனியார் பாடசாலைகளுக்கு இன்று முதல் 8ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்பட் 15

## 10 வயது சிறுவனின் உயிரை பறித்த ரம்புட்டான் பழம்

(கரணவாய்)
ரம்புட்டான் பழத்தை விழுங்கிய 10 வயதுச் சிறுவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளான். காங்கேசன்துறை கொல்லன்கலட்டியைச் சேர்ந்த தர்மராசா தர்சிகன் என்பவரே உயிரிழந்தார்.
நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ரம்புட்டான் பழத்தை விழுங்கிய சிறுவன் திடீரென சுகவீன 15

## நாட்டை கட்டியெழுப்புவோம் எனக் கூறுவது மாயையானது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)
தற்போதைய அரசாங்கத்தால் இனிமேலும் தொடர்ந்து நாட்டை முன்கொண்டு செல்ல முடியாது என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.
எனவே ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமை 15

பொருளாதார நெருக்கடியால் அம்புலன்ஸ்

## சேவைகளும் முடங்கும் நிலை

(கொழும்பு)
நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக அவசர நிலையில் நோயாளர்களை அழைத்துச் செல்ல வருகையில் 15 முதல் 20 நிமிடங்கள் வரை தாமதம் ஏற்படக்கூடும் என்று சுவசெரிய அம்புலன்ஸ் சேவை அறிவித்துள்ளது.
ஏற்கெனவே நாளாந்தம் சுமார் 1000 நோயாளர் இடமாற்றங்களை வழங்கிவந்த சேவை தற்போது 1600 வரை அதிகரித் 02

## தமிழகத்துக்கு தஞ்சம் கோரி சென்ற மூதாட்டி மரணம்

(மன்னார்)
இலங்கையில் இருந்து படகு மூலம் தனுஷ்கோடி சென்ற வயதான தம்பதியர் கடற்கரையில் மயங்கிக் கிடந்த நிலையில் மீட்கப்பட்டு ராமநாதபுரம் மாவட்ட அரச மருத்துவக் கல்லூரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர 15

## டோக்கன் நடைமுறை தற்போது இல்லை

### எரிசக்தி அமைச்சர்

(கொழும்பு)
எரிபொருள் வழங்குவதில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள டோக்கன் 02

## மீண்டும் முடக்கம்?

### ஆராய்கிறது அரசு

(கொழும்பு)
அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்வோர், தங்களுக் 15

## எரிபொருள் கையிருப்பை வெளியிட்டார் அமைச்சர்

(கொழும்பு)
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் தற்போது கையிருப்பில் உள்ள எரிபொருள் குறித்த பட்டியலை எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர வெளியிட்டுள்ளார்.
அந்த வகையில் ஒட்டோ டீசல் - 12,774 மெற்றிக் தொன், சுப்பர் டீசல் - 233 மெற்றிக் தொன், 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
24.05.1936

இறப்பு
14.07.2021

அமரர்
## புண்ணியமூர்த்தி பரமேஸ்வரி
ஓய்வுபெற்ற ஆசிரியை

திதி : ஸ்கந்த பஞ்சமி

விழிகள் நீர் காயவில்லை
உம் மழலை மொழி மறக்கவில்லை
மாதம் பன்னிரண்டு ஆனபின்பும்
உம் மழலை முகம் மனக்கண்ணின் முன்னே.

(C-4575)

குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் விஞ்ஞான பாட
ஆசிரியை திருமதி **நாகறஞ்சினி ரவீந்திரன்**
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி சரஸ்வதி பேரின்பநாயகம்

அவர்கள் காலமான செய்தியறிந்து துயரடைகின்றோம்.
அன்னரின் இழப்பால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ மல்லாகம் மகா வித்தியாலயம்

(12061)

## மலேசியா...

நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்தபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதன்படி 50 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல் மற்றும் 10 ஆயிரம் மெற்றிக் தொன் மண்ணெண்ணெய் என்பன எதிர்வரும் 10 அல்லது 11 ஆம் திகதிகளில் இலங்கைக்கு வரவுள்ளதாக அமைச்சர் கூறினார்.

தலா 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் கொண்ட இரண்டு எரிபொருள் கப்பல்கள் ஜூலை 08 - 09 மற்றும் ஜூலை 11 - 14 ஆகிய திகதிகளில் இலங்கைக்கு வரும் எனவும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார். (4-7)

## பொருளாதார...

துள்ளது.

2. இந்த அதிகரித்த தேவையை தற்போதைய டீசல் நெருக்கடியுடன் தற்போதிருக்கும் அம்புலன்ஸ்கள் மூலமே நிர்வகிக்க வேண்டியுள்ளது.

3. எரிபொருள் பற்றாக்குறையால் சுவசெரிய அம்புலன்ஸ் சேவை ஊழியர்கள் பணி நிலையங்களுக்கு வருவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த மூன்று சிக்கல்களினால் குறித்த கால தாமதம் ஏற்பட நேரிடலாம் என்று குறித்த சேவை பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் தங்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட தாமதங்கள் அல்லது அசௌகரியங்கள் ஏற்பட்டால் அவற்றைப் பொறுத்துக் கொள்ளுமாறு குறித்த சேவை கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த நெருக்கடியான காலத்திலும் பொதுமக்களுக்கு அதிகபட்ச சேவையை வழங்க அனைத்து முயற்சிகளையும் செய்வதாகவும் சுவசெரிய அம்புலன்ஸ் சேவை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## டோக்கன் நடை...

முறையானது ஜூன் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் மாத்திரமே அமுலில் இருந்ததாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் மக்கள் எரிபொருள் இல்லாமல் தங்குவதைத் தடுப்பதற்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்ட போதிலும், தற்போது IOC எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் டோக்கன்கள் வியாபாரமாக மாறியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (4-7)

# மரண அறிவித்தல்

ஓம் ஸ்ரீசாயிராம்

## திருமதி யோகாம்பிகை இரத்தினசபாபதி



தோற்றம் 15.09.1931

மறைவு 30.06.2022

மலாயாவில் (Malaysia) பிறந்தவரும் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை, கனடா ஆகிய இடங்களில் வசித்தவருமாகிய திருமதி யோகாம்பிகை இரத்தினசபாபதி அவர்கள் கடந்த 30.06.2022 (வியாழக்கிழமை) அன்று காலை 6.30 மணிக்கு இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா இரத்தினசபாபதி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற புண்ணியமூர்த்தி - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் மணிவண்ணன் (அவுஸ்திரேலியா), அமலவண்ணன் (லண்டன்), ஞானவண்ணன் (Oshawa Toronto), ஆதிரை (அவுஸ்திரேலியா), சோதிவண்ணன் (Ottawa Canada), உத்தரை (அவுஸ்திரேலியா), கஸ்தூரி (Ottawa Canada) ஆகியோரின் பாசமிக்க தாயாரும் அனுசலா, சாந்தா, ராசம்மா, ஞானேந்திரன், சுவந்தினி, விக்னேஸ்வரன், பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் மாயவன், மாதவன், கௌதமன், பிரசாந்தன், ராகம், தனஞ்செய், அமிர்தன், தபோவன் ஆகியோரின் அன்புமிகு அப்பம்மாவும் அபிராமி, லோகினி, சுபாஷினி, ஆதித்தன், அகிலன், பிரகாஷ், பிரமேஷ், மகிந்தன் ஆகியோரின் அன்புமிகு அம்மம்மாவும் ஆகேஷ், சஹானா, சாயி, யுவன், ஏவியல் (Avielle) ஆகியோரின் அருமைமிகு கொள்ளுப்பாட்டியும் பத்மநாதன் (Toronto Canada), காலஞ்சென்றவர்களான கணேசமூர்த்தி, தண்டாயுதபானி, சொக்கலிங்கம், புனிதவதி, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை மறுதினம் (06.07.2022) புதன்கிழமை மாலை 6.00 மணி முதல் 9.00 மணி வரையும் மறுநாள் 07.07.2022 (வியாழக்கிழமை) காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரையும் பார்வைக்காக வைக்கப்பட்டு Ajax Crematorium & Visitation Centre, 384 Finly Avenue, Ajax, On, L1s 2E3 இல் 07.07.2022 (வியாழக்கிழமை) அன்று காலை 10.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :- Toronto, Canada - ஞானவண்ணன் (ஞானா)+ 16475270194
Ottawa, Canada - சோதிவண்ணன் (சோதி) + 16138635765
London, UK - அமலவண்ணன் (அமலன்) +447534499862
Canberra, Australia - மணிவண்ணன் (மணி) +61428889333

(12056)

உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

**அன்பு வாசகர்களே!**

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரின் உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

**தொடர்புகளுக்கு:**

தொலைபேசி:
076 097 3127
021 221 7603
Viber: 076 636 3378
E.mail:
valampurii@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச முதலீட்டாளர்களுக்கு 24 மணி நேரத்தில் அனுமதி

## அமைச்சர் தம்மிக்க

(கொழும்பு)

**இலங்கையில் முதலீடுகளைச் செய்வதற்கு முன்வரும் சர்வதேச முதலீட்டாளர்களுக்கு 24 மணிநேரத்தில் அனுமதிகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேரா தெரிவித்தார்.**

நாட்டின் பொருளாதார நெருக்கடிகளை போக்குவதற்கான அடுத்தகட்டச் செயற்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிற்கு முதலீட்டாளர்களை வரவழைப்பதற்கான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்காக, இராஜதந்திர மற்றும் ஏனைய துறைசார்ந்த நிபுணத்துவம் வாய்ந்த சர்வதேச தரப்புக்களுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே, வெளிநாட்டு முதலீட்டாளர்களை உள்ளீர்ப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, இலங்கையில் உள்ள வெளிநாட்டு நிறுவனங்களின் உரிமையாளர்கள், மற்றும் ஊழியர்களுக்கான விசா காலத்தை ஒரே தடவையில் 5 வருடங்களுக்கு நீடிக்கப்பட்டதாக வழங்குவதற்கு தீர்மானித்திருந்தோம்.

அதற்கான செயற்பாடுகள், கடந்த வெள்ளிக்கிழமை முதல் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டு விட்டன. அடுத்த கட்டமாக கடவுச்சீட்டுக்களைப் பெறுவதற்கான ஒருநாள் சேவையானது, இன்று திங்கட்கிழமை முதல் வெளிமாவட்டங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த நிலையில், இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு முன்வருகின்ற சர்வதேச முதலீட்டாளர்களுக்கு 24 மணிநேரத்தில் முதலீட்டுச் சபையின் அனுமதியை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள்



மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், தனிப்பட்ட வகையில், இலங்கையின் சமூக மற்றும் பொருளாதார முதலீடுகளின் முன்னுரிமைகளை ஆதரிப்பதற்காக, வருவாயானது நியாயமான, பொறுப்பான மற்றும் திறமையான வழியில் உயர்த்தப்பட்டு செலவிடப்படுவதை உறுதி செய்வதற்குரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என தெரிவித்தார். (4)

# பெரமுன அரசின் கீழ் பிரதமர் பதவி வேண்டாம்

## மைத்திரி அறிவிப்பு

(கொழும்பு)

மகாசங்கத்தின் வழிகாட்டுதலின்படி கூடிய விரைவில் சர்வ கட்சி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள் ளார்.

அவ்வாறு அமைக்கப்படாவிட்டால் இலங்கை, கலவரங்கள் மற்றும் போராட்டங்களின் மையமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் கீழ் பிரதமர் பதவியை ஏற்கமாட்டேன் என்றும் தெரிவித்துள்ளார்.

பொருளாதார மந்தநிலையில் இருந்து இலங்கையை மீட்பதற்கு தற்போதைய அரசாங்கத்திற்கு திறமையும் அறிவும் இல்லை.



எனவே அனைத்து ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களும் பதவி விலகுமாறு மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார்.

அத்தோடு அரசாங்கம் உடனடியாக இராஜினாமா செய்து அனைத்துக் கட்சி ஆட்சி அமைக்க வழிவகை செய்ய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (4)

# இராணுவ முகாம்களிலிருந்து மருத்துவர்களுக்கு எரிபொருள்

(கொழும்பு)

அருகில் உள்ள இராணுவ முகாம்களில் இருந்து மருத்துவர்களுக்கு எரிபொருள் விநியோகிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கு இராணுவத் தளபதியும் இணக்கம் தெரிவித்ததாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எஸ். ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து மருத்துவர்களுக்கு எரிபொருள் விநியோகிக்கும் போது ஏற்படும் அமைதியின்மையை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (4)

# இன்னும் சில நாட்களில் வரவுள்ள யூரியா உரம்

(கொழும்பு)

இந்திய கடன் உதவியின் கீழ் இலங்கைக்கு வழங்கப்படும் முதல் தொகுதி யூரியா உரம், ஓமான் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள கப்பலில் ஏற்றும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

இந்நிலையில் அடுத்த சில தினங்களில் குறித்த கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைய உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

65,000 மெற்றிக் தொன் யூரியா உரத்தில் 40,000 மெற்றிக் தொன் உரம் கப்பலில் ஏற்றப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய உர இருப்பை இன்னும் சில வாரங்களில் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் விவசாயப் பணிப்பாளர் நாயகம் அஜந்த டி சில்வா தெரிவித்துள்ளார். (4)

# நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம் மீண்டும் மூடல்

## இருளில் மூழ்கவுள்ள இலங்கை?

(கொழும்பு)

நுரைச்சோலை "லக்விஜய" நிலக்கரி மின்நிலையத்தில் உள்ள மற்றொரு 300 மெகாவாட் மின் உற்பத்தி அலகு பெரிய மறுசீரமைப்பிற்காக மூடப்படவுள்ளது. அதேபோன்ற ஒரு அலகின் தற்போதைய பராமரிப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை மின்சார சபையின் (CEB) தலைவர் என்.எஸ். இளங்கோன் தெரிவிக்கையில்,

யூனிட் 2 இன் தற்போதைய பராமரிப்பு நடவடிக்கைகள் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் முடிவுறுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அது மீண்டும் செயற்படத் ஆரம்பித்தவுடன், யூனிட் 3 அதன் திட்டமிட்ட பராமரிப்புக்காக மூடப்படவுள்ளது.

இதற்கு இரண்டு மாதங்களுக்கும் மேலாக தேவைப்படும். இதனால் 300 மெகாவாட் மின்சாரம் இழக்கப்படுவதைத் தடுக்க வேண்டும். இதற்காக மின்சார சபை எரிபொருள் மற்றும் நீர்மின் உற்பத்தியை நாட வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

அலகு 3 இன் பராமரிப்பு திட்டமிடப்பட்ட போதிலும், அலகு 2 மற்றும் 3 இற்கு தேவையான உதிரிபாகங்கள் இன்னும் கொள்வனவு செய்யப்படவில்லை என்றார். (4)

# நிதியமைச்சர் பதவிக்கு மீண்டும் அலிசப்ரி?

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விரைவில் நிதியமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்படலாம் என அரசாங்கத்தின் உட்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச நாணய நிதியத்துடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையை வெற்றிகரமாக முடிக்க ரணில் விக்கிரமசிங்க தவறியுள்ளதன் காரணமாக அவரை நிதியமைச்சர் பதவியில் இருந்து நீக்க உள்ளதாக கூறப்படுகிறது.

இதனையடுத்து கடந்த ஏப்ரல் மாதம் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்த முன்னாள் நிதியமைச்சர் அலி சப்ரி மீண்டும் நிதியமைச்சராக நியமிக்கப்படலாம் என அந்த தகவல்கள் கூறுகின்றன.

எனினும் இந்த தகவல் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை. (4)

# கோட்டாவின் உருவ பொம்மையை கட்டித்தூக்கிய மக்கள்

(கொழும்பு)

நாட்டில் பொருளாதார நெருக்கடி அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

அரசுக்கு எதிராக பாதையில் இறங்கிய மக்கள் ஆரம்பத்தில் பல கோரிக்கைகளை முன்வைத்தனர்.

அவற்றுக்கான தீர்வு கிடைக்காத நிலையில் தமது தேவைகளை நிறைவேற்ற கூறியும் திறமையற்ற அரசை பதவி விலகக் கூறியும் எச்சரிக்கை விடுத்த வண்ணம் உள்ளனர்.

இந்நிலையில் விரக்தியின் உச்சத்தை தொட்ட மக்கள் நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உருவ பொம்மையை தூக்கில் இட்டு தமது எதிர்ப்பை தெரிவித்துள்ளனர். (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டெஸ்ட் தொடரில்

# ஒரு ஓவரில் அதிக ஓட்டங்களை குவித்து பும்ரா சாதனை



இங்கிலாந்துக்கு எதிராக எஸ்பெஸ்டன் விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் 5 ஆவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஒரே ஓவரில் அதிக ஓட்டங்களைக் குவித்த வீரர் என்ற உலக சாதனையை இந்திய அணித்தலைவர் ஜஸ்ப்ரிட் பும்ரா நிலை நாட்டியுள்ளார்.

இங்கிலாந்தின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான ஸ்டுவர்ட் ப்றோடின் ஓவரிலேயே 10ஆம் இலக்க வீரரான பும்ரா உலக சாதனையை நிலைநாட்டினார்.

அந்த ஓவரில் 5 வைட்கள், ஒரு நோபோல் உட்பட மொத்தமாக 35 ஓட்டங்கள் பும்ரா 29 ஓட்டங்களைப் பெற்று மேற்கிந்தியத் தீவுகளின் ப்றயன் லாரா ஒரே ஓவரில் குவித்த 28 ஓட்டங்கள் என்ற டெஸ்ட் கிரிக்கெட் உலக சாதனையை முறியடித்தார். தென் ஆபிரிக்காவுக்கு எதிராக 2004 இல் ப்றயன் லாரா நிலைநாட்டிய சாதனை 18 வருடங்களின் பின்னர் பும்ராவால் முறியடிக்கப்பட்டுள்ளது. (4)

# கடினப்பந்து துடுப்பாட்ட போட்டி சட்டத்தரணிகள் அணி வெற்றி




வடமாகாண சட்டத்தரணிகள் கிரிக்கெட் அணியினருக்கும் வடமாகாண மருத்துவர் கிரிக்கெட் அணியினருக்குமிடையிலான கடினப்பந்து துடுப்பாட்ட போட்டியில் சட்டத்தரணிகள் அணி வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற இப் போட்டியில் மருத்துவர் அணி நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

நிர்ணயிக்கப்பட்ட 35 பந்து பரிமாற்றங்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 206 ஓட்டங்களை மருத்துவர் அணி பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில் அணித் தலைவர் மருத்துவர் கணேசமூர்த்தி சிறிதரன் 39 ஓட்டங்களையும்,மருத்துவர் ரஜீவ் நிர்மலசிங்கம் 32 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் சட்டத்தரணிகள் அணி சார்பில் சட்டத்தரணி த.அஞ்சனன் 3 விக்கெட்டுக்களையும், சட்டத்தரணி இராசையா இளங்குமரன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 207 ஓட்டங்களை இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய சட்டத்தரணிகள் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 20.3 பந்துப் பரிமாற்றங்களில் 207 ஓட்டங்களை பெற்று வெற்றியை பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் சட்டத்தரணி வி. மணிவண்ணன் (யாழ்.மாநகர முதல்வர்) அதிரடியாக 72 ஓட்டங்களையும் சட்டத்தரணி த. அஞ்சனன் அபாரமாக 40 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் மருத்துவர் அணி சார்பில் மருத்துவர் கௌரிபாகன் 2 விக்கெட்டுக்களையும், மருத்துவர் ரஜீவ் நிர்மலசிங்கம் 1 விக்கெட்டையும் சாய்த்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாகவும் சிறந்த பந்துவீச்சாளராகவும் சகல துறைகளிலும் பிரகாசித்த சட்டத்தரணி த. அஞ்சனனும் சிறந்த களத்தடுப்பாளராக மருத்துவர் ரஜீவ் நிர்மலசிங்கமும் சிறந்த துடுப்பாட்ட வீரராக வி. மணிவண்ணனும் தெரிவு செய்யப்பட்டனர்(4-6-33)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2655

### மிதுன்

இலையை வெட்டி ஆட்டுக்கு போடுவாங்க



ஆட்டை வெட்டி இலையில போடுவாங்க இவ்ளோதான் வாழ்க்கை.



### சௌமி

என்னம்மா உள்ள ஏதோ கார்த்திகா, மீரானு கேட்டுச்சு... எனக்கு பொண்ணு ஏதும் பாக்க போறீங்களா?




அது சீயக்காய் தூள் பேருடா



### சாய்

ஒருமுறையேனும் உங்கள் தலைமுறையை தஞ்சை பெரிய கோயிலுக்கு கூட்டிச் செல்லுங்கள்.



1100 ஆண்டுக்கு முந்தைய தமிழனின் ஆற்றல், கலை, அறிவு, வீரம் உங்கள் மரபணுவில் புதுப்பிக்கப்படும்.

### சம்யுத்தா

இந்தியாவில 65 % ஆண்கள்
பொண்டாட்டி பேச்ச
கேக்குறாங்க
அப்ப மத்தவங்க...?
அவங்களுக்கு இன்னும்
கல்யாணம் ஆகல..

### நிரோஷன்

பென்ஸ் கம்பெனிக்காரன் பார்த்தா தூக்குல தொங்கிடுவான்...



### சுகன்யா

பொண்டாட்டிக்காக ஒருத்தன் கதவ திறக்கான்ன



ஒன்னு பொண்டாட்டி புதுசா இருக்கனும் இல்ல காரு புதுசா இருக்கனும்.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் நிலையங்கள் மூடல் 15 ஆயிரம் பேர் வேலையிழப்பு

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (CPC) கீழ் உள்ள 1,000 எரிபொருள் நிலையங்கள் மூடப்பட வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளன.

இதனால் சுமார் 15,000 பணியாளர்கள் நிலையான வேலைவாய்ப்பின்றி உள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில நாட்களாக எரிபொருள் விநியோகம் இல்லாததால் CPC விநியோக வலையமைப்பின் கீழ் இயங்கும் 1,160 எரிபொருள் நிலையங்கள் முற்றாக மூடப்பட்டுள்ளன.

அதேவேளை, பிரதி வெள்ளிக்கிழமைகளில் மாத்திரம் சுகாதாரத் துறை ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்க சுமார் 50 பெற்றோல் ஷெட்கள் மட்டுமே திறக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (4)

# புத்தளத்தில் மானை வேட்டையாடியவர் கைது

(புத்தளம்)

புத்தளம் வண்ணாத்திவில்லு பகுதியில் காட்டு துப்பாக்கியினால் மானொன்றை வேட்டையாடி இறைச்சிக்காக விற்பனை செய்த குற்றத்திற்காக கருவலகஸ்வெவ வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளினால் நேற்று முன்தினம் ஒருவர் கைது செய்து செய்யப்பட்டுள்ளார்.

மான் இறைச்சி விற்பனை இடம்பெற்று வருவதாக வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமையவே இந்த கைது இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரையும் மானின் உடற்பாகங்களையும் புத்தளம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளார். (4)

# மலையகத்தில் கடும் மழை 21 குடும்பங்கள் பாதிப்பு



(கண்டி)

மலையக பிரதேசங்களில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முதல் கனமழை மற்றும் பலத்த காற்று காரணமாக பல்வேறு பகுதிகளில் வெள்ளப் பெருக்குடன் சிறு சிறு மண்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன.

வட்டவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரொசல்ல ஜட்றி பகுதியில் வெள்ள நீர் பெருக்கத்தால் விவசாய நிலங்கள் மற்றும் தோட்ட தொழிலாளர்களின் குடியிருப்பு களும் பாதிக்கப்பட்டுள்ளன.

மழை காரணமாக இப் பகுதியில் 21 வீடுகள் வெள்ள நீரினால் நிரம்பியதுடன், மேலும் சில வீடுகளுக்கு சிறிதளவு வெள்ளநீர் உட்புகுந்துள்ளது. (4)


# கண்ணீர் அஞ்சலி



எமது சக ஆசிரியர்
திரு. நடராசா சுரேஷ்குமார்
அவர்களின் அன்புத் தந்தை
அமரர். செல்லத்துரை நடராசா
அவர்களின் பிரிவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு, அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(2055)

அதிபர், ஆசிரியர்கள் , கல்விசாரா ஊழியர்கள்
யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

# 31ம் நாள் நினைவஞ்சலி

அமரர். மகேஸ்வரி நவரத்தினம்



தோற்றம் -1934- 07- 16
மறைவு -2022- 06- 04

கடந்த 2022.06.04 சனிக்கிழமை
இறைபதமெய்திய
எங்கள் குடும்பத் தலைவி
அமரர். மகேஸ்வரி நவரத்தினம்
அவர்களின் மரணச் செய்தியறிந்து
நேரிலும் தொலைபேசி, பத்திரிகை,முகநூல்
ஊடாகவும் ஆறுதல் தெரிவித்து துயரில்
பங்கு கொண்ட உறவினர்கள், அயலவர்கள்
நண்பர்கள் அனைவருக்கும்
எமது நன்றியறிதலைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.
இன்று 2022 .07.04, திங்கட்கிழமை
எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்
கிருத்திய நிகழ்வுகளில் பங்கேற்று
அதனைத் தொடர்ந்து நடைபெறும்
மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-4575)

61/19, மில் லேன், பிரம்படி,
கொக்குவில்

குடும்பத்தினர்.


# இராசிபலன்

04.07.2022
ஆனி 20, திங்கட்கிழமை
பஞ்சமி பிற்பகல் 3.44 மணிவரை

மகம் காலை 6.55 மணிவரை
சுப நேரம் -11.57-1.27 மணிவரை
இராகு காலம் -7.27-8.57 மணிவரை

சுவாமி விவேகானந்தர் நினைவுதினம்
சந்திராஷ்டமம்- திருவோணம்

வளவன்

**மேஷம்** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், சுப முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வழிபாடு காரிய வெற்றி தரும், பிறர் உதவியுண்டு.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**துலாம்** திடீர் பண வரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கௌரவமான நாள்.

**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.

**ரிஷபம்** தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும் நாள், சுகங்களும், சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்** குடும்பத்தில் சுமைகளும், பொறுப்புக்களும் கூடலாம், திடீர் பயணங்கள் உருவாகும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்** இனிய சம்பவங்கள் நடைபெறும் நாள், உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், உறவினர் , நண்பர்கள் வழியில் கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்,காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும்.

**மிதுனம்** பொது நல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள்.

**கன்னி** தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, சயனசுகக் குறைவான நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**தனுசு** ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**மீனம்** நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உற்சாகமான நாள், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவர்கள் பாராட்டக்கூடிய நற்செயல்களில் மட்டும் ஈடுபடு.

# தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ள யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம்

(சாவகச்சேரி)

எரிபொருள் வழங்கலின் போது நிகழ்கின்ற பாகுபாடுகளைச் சுட்டிக்காட்டியும் அதனை சீர் செய்யக் கோரியும் யாழ்.மாவட்ட சமுர்த்தி அபி விருத்தி உத்தியோகத்தர் சங்கம் இன்று திங்கட்கிழமை தொடக்கம் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

இது தொடர்பாக சமுர்த்தி உத்தியோகத்தர் சங்கம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் யாழ்.மாவட்டத்தில் கடமையில் ஈடுபடும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சில பிரதேச செயலகங்களில் எரிபொருள் வழங்கலின் போது புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் மக்களுக்கான அத்தியாவசியப் பணிகளில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் விநியோகத்தத்திற்கான ஒழுங்குபடுத்தல் பணிகளில் பிரதேச செயலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ள போதும் அவர்களின் கீழ் அத்தியாவசியப் பணிகளில் ஈடுபட்டுவரும் சமுர்த்தி உத்தியோகத்தர்களின் சேவைத் தேவையை கருத்திற்கொள்ளாது ஏனைய உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் வழங்கப்படுகின்ற பாகுபாட்டினைக் கண்டித்தும், எதிர்காலத்தில் எரிபொருள் வழங்கலின் போது உரிய பொறிமுறையைப் பின்பற்றி எரிபொருள் வழங்குவதனை உறுதிப்படுத்துமாறும் கோரியும் இன்று திங்கட்கிழமை தொடக்கம் எமது உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள் விநியோகம் சீராகும் வரை தொடர் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளோம் என தெரிவித்தனர். (4-6-30)



கவிஞர் நந்தினியின் "சிந்தை கவரும் சிறுவர் கதைகள்" என்ற நூல் வெளியீட்டு வைபவம்அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் இடம்பெற்றது. (படம் : சுபேசன்)

## சைவப்புலவர் பரீட்சைகள்

(குப்பிழான்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் நடத்தப்படும் 2022 ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் மற்றும் இளஞ் சைவப்புலவர் பரீட்சைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 16 ஆம் திகதி சனிக்கிழமை, 17 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளதாக அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

குறித்த பரீட்சைகள் யாழ்ப்பாணம் நாவலர் மகா வித்தியாலயம், மட்டக்களப்பு மெதடிஸ் பெண்கள் வித்தியாலயம், கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது. (4)



நூற்றாண்டு பழமை மிக்க நீர்வேலி செல்லக்கதிர்காம முருகன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் அண்மையில் இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன்)

## மாதகல் புவனேஸ்வரி அம்பாள் கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மாதகல் பாணாகவெட்டி அருள்மிகு ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்- 2022 இன்று திங்கட்கிழமை மதியம் 12 மணிக்கு பூர்வாங்கக் கிரியைகளுடன் ஆரம்பமாகவுள்ளது.

நாளை மறுதினம் 6 ஆம் திகதி புதன்கிழமை காலை 7.10 மணிமுதல் 8.10 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் பாலஸ்தான கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது என ஆலய தர்மகர்த்தா சபை அறிவித்துள்ளது. (4-6)

## அல்வாயில் வாள்வெட்டு இருவர் படுகாயம்

(கரணவாய்)

வடமராட்சி அல்வாய் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்து மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் ஆபத்தான நிலையில் யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, முதல் நாள் அப்பகுதியில் உள்ள இரு பகுதியினருக்கிடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்தைத் தொடர்ந்தே இவ் வாள் வெட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (4-6-60)

## மீசாலை சந்தியில் பேருந்து மோதியதில் இருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை சந்திப் பகுதியில் ஏ9 வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து மோட்டார்சைக்கிளில் சென்ற தாத்தா மற்றும் அவரது பேர்த்தி மீது மோதியதில் இவ் விபத்துச் சம்பவித்துள்ளது.

இதில் சாவகச்சேரி டச் வீதியைச் சேர்ந்த 70 வயதான முதியவர் மற்றும் அவருடைய 18 வயதான பேர்த்தி ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். குறித்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

## மஹோற்சவம்

(குப்பிழான்)

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்தும் 11 தினங்கள் நடைபெறவுள்ள இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி மாலை 6 மணிக்குச் சப்பரத்திருவிழாவும், 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து தேர்த்திருவிழாவும், 13 ஆம் திகதி புதன்கிழமை காலை8 மணிக்குத் தீர்த்த உற்சவமும், அன்றையதினம் மாலை கொடியிறக்க உற்சவமும் நடைபெறும் என மேற்படி ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (4-6-18)



அமரர்.நாகலிங்கம் தெய்வேந்திரத்தின் முதலாம் ஆண்டு நினைவை முன்னிட்டு விதையனைத்தும் விருட்சமே குழுமத்தின் ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு அண்மையில் தாவடி அம்பலவாணர் வேதவிநாயகர் நூலக மண்டபத்தில் நடைபெற்றது. (படம் : ரவிசாந்)



இமையாணன் அ.த.க. பாடசாலைக்கு எட்டு கணணித் தொகுதிகளை பாடசாலை பழைய மாணவரான சின்னையா இராஜரட்ணம் கடந்த வெள்ளிக்கிழமை இமையானன் அ.த.க.பாடசாலை பழைய மாணவர் சங்க நிர்வாகத்திடம் கையளித்துள்ளார். (படம்:மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோதுமை மாவை ஏற்றிவந்த லொறி தடம்புரண்டது



(ஏறாவூர்)

கோதுமை மாவை ஏற்றி வந்த லொறி ஒன்று விபத்துக்கு ள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்கு ட்பட்ட பிரதான வீதியில் வைத்தே இந்த விபத்துச் சம்பவம் நேற்று அதிகாலை இடம் பெற்றுள்ளது.

கொழும்பு பகுதியில் இரு ந்து மட்டக்களப்பு நோக்கி கோதுமை மாவை ஏற்றிச் செல்லும் போது சாரதிக்கு ஏற்பட்ட தூக்கம் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இவ்வாறு விபத்துக்குள்ளான லொறியில் பயணம் செய்த சாரதியும் நடத்துநரும் காயங்களின்றி தப்பியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (4)

## கடவுச்சீட்டு ஒரு நாள் சேவை

# மேலும் 3 மாவட்டங்களில் இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

இன்று திங்கட்கிழமை தொடக்கம் மேலும் மூன்று மாவட்டங்களில் கடவுச்சீட்டு க்களை வழங்கும் ஒருநாள் சேவை ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக மாத்தறை, வவுனியா மற்றும் கண்டி மாவட்டங்களில் குடிவரவு, குடிய கல்வு திணைக்களத்தின் கிளை அலுவலகங்கள் மூலம் இந்த சேவை முன்னெடுக்கப்படவுள்ளது. (4)

# லிட்ரோ நிறுவனத்திற்கு கோப் குழு அழைப்பானை

(கொழும்பு)

அரசுக்கு சொந்தமான லிட்ரோ லங்கா லிமிடெட் நிறுவனத்தின் தலைவர், சிரேஷ்ட லிட்ரோ அதிகாரிகள் மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் (SLIC) பிரதிநிதிகள் ஆகியோருக்கு கோப் குழு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

கோப் குழுவில் (COPE) நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

சமீபத்தில் 280,000 மெற்றிக் தொன் திரவமாக்கப்பட்ட பெற்றோலிய எரிவாயு கொள்முதலின் போது முறைகேடு இடம் பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த விடயம் தொடர்பில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மரிக்கார் கோப் குழுவிடம் செய்த முறைப்பாட்டையடுத்து, இந்த அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. (4)

# ஆஸிக்கு செல்ல முயன்ற 51 பேர் திருமலையில் கைது

(திருமலை)

அவுஸ்திரேலியாவிற்கு சட்டவிரோதமாக குடியேற முயற்சித்த 51 பேர் கொண்ட மற்றுமொரு குழுவை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது திருகோணமலை கடற்பரப்பில் வைத்து குறித்த குழுவினர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் இந்த மோசடியில் ஈடுபட்ட 6 பேர் உட்பட 41 ஆண்கள், ஐந்து பெண்கள் மற்றும் ஐந்து குழந்தைகள் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் மேலதிக நடவடிக்கைகளுக்காக திருகோணமலை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். (4)

# தந்தையை கொலை செய்த தாயும் மகனும்

## பதுளையில் கொடூரம்

(பதுளை)

தந்தை ஒருவர் மகனின் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் அவரது மனைவியும் மகனும் சேர்ந்து மண்வெட்டியால் தந்தையை தாக்கிக் கொலை செய்த கொடூர சம்பவம் பதுளையில் இடம்பெற்றுள்ளது.

பதுளை - கஹட்டருப்ப பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயதான நபரே இவ்வாறு மண்வெட்டியால் தாக்கிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபரின் 33 வயதான மனைவியும் அவரது 17 வயதான மகனுமே இந்தக் கொலைச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர் எனவும், அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பதுளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மகனின் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அவரைத் துன்புறுத்தியதே கணவரின் கொலைக்கான காரணம் எனச் சந்தேகநபரான மனைவி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

மேலும், மனைவி கடந்த மே மாதம் 31 ஆம் திகதி இந்தக் கொலையை செய்து, மகனுடன் சேர்ந்து சடலத்தைக் காட்டில் வீசிவிட்டு பொலிஸ் நிலையத்தில் தனது கணவனைக் காணவில்லை என முறைப்பாடு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4)

# திருச்சி, மதுரைக்கான சரக்கு விமான சேவை இடைநிறுத்தம்

(கொழும்பு)

திருச்சி, மதுரை விமான நிலையங்களிலிருந்து இலங்கைக்கான சரக்கு விமான சேவை கடந்த 1 ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து சென்னை, திருச்சி, மதுரை ஆகிய விமான நிலையங்களுக்கு ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம் விமான சேவையினை முன்னெடுத்தது.

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக சென்னைக்கு 2 விமான சேவையும், திருச்சிக்கு ஒரு விமான சேவையும், மதுரைக்கு வாரத்துக்கு 3 சேவையும் என குறைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் சரக்கு விமான சேவையை நிறுத்திக் கொள்வதாக ஸ்ரீலங்கன் ஏர் லைன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்காரணமாக சென்னை, திருச்சி, மதுரையில் இருந்து நாளொன்றுக்கு சராசரியாக ஏற்றுமதி செய்யப்பட்டு வந்த 10 தொன் பொருட்கள் தேக்கமடையும் நிலை ஏற்பட்டுள்ளது. (4)

# இலங்கையின் நிபுணத்துவ இராஜதந்திரியாக அரசாங்கத்திற்கு பணியாற்றுமாறும் அந்த நியமனத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும் இந்து பௌத்த கலாசார பேரவையின் பொதுச் செயலாளர் தேசமான்ய M.T.S. இராமச்சந்திரனிடம் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார் கௌரவ நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச



இந்து பௌத்த கலாசார பேரவையில் கடந்த 25.06.2022 இல் 100 இற்கும் அதிகமான ஆசிரியர் பயிற்சி பெற்ற இளைஞர் யுவதிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்து பௌத்த கலாசார பேரவையின் பொதுச் செயலாளர் தேசமான்ய M.T.S. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார் நீதி அமைச்சர் மாண்புமிகு கௌரவ விஜயதாச ராஜபக்ச மற்றும் வைபவத்தில் கௌரவ சிறப்பு அதிதிகளாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர், மேலதிக அரசாங்க அதிபர், யாழ்.மாவட்ட இராணுவ கட்டளை தளபதி, வடக்கு மாகாணத்திற்கான பிரதி பொலிஸ்மா அதிபர், நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர்.

12 வருடங்களுக்கு முன்பே தூர நோக்க சிந்தனையில் இரு இனங்களுக்குமிடையில் மொழி ஒரு தடையாக இருக்காமல் அந்த உறவை பேணி வளர்ப்போமாக இருந்தால் நிச்சயமாக ஒரு இலங்கையை கட்டியெழுப்புவது சாதாரண விடயமென்று கருதி இரு இனங்களுக்கு இடையே இரண்டாவது மொழியினை கற்பித்து இனங்களின் ஒற்றுமைக்காக தொடர்ச்சியாக 23000 தமிழ் இளைஞர், யுவதிகளை வடக்கு மாகாணத்தில் மட்டும் 2வது மொழியை கற்பித்து சாதனை படைத்துள்ளார் தேசமான்ய M.T.S. இராமச்சந்திரன் என அவரை பாராட்டி பேசினார் கௌரவ நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச. மேலும் அவர் உரையாற்றுகையில் 40 வருடங்கள் ஜேர்மனியின் சட்ட நிறுவனத்தில் குடிவரவு குடியகல்வு சட்ட ஆலோசகராக பணியாற்றி அந்த நாட்டிலுள்ள இலங்கைத் தமிழர்களின் இலட்சக்கணக்கான




நிராகரிக்கப்பட்ட அகதி அந்தஸ்து வழக்குகளை வாதாடி வென்று இலங்கை தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் சிங்களவர் பாராது தன்னுடைய தொழில் திறமையால் நிரந்தர குடியுரிமை வசிப்புரிமைகளை பெற்றுக்கொடுத்ததோடு மட்டுமல்லாது அதே நேரம் வடக்கு மாகாணத்திற்கு வந்து தன்னுடைய சொந்த நிதியில் 23000 மாணவர்களுக்கு இரண்டாவது மொழியை கற்பித்து முடித்துள்ளார். அதற்கான முழுச் செலவும் அவருடைய சட்ட நிறுவனமான ஜேர்மனி, இலங்கையில் உள்ள நிறுவனங்கள் அனுசரனை வழங்கி வருகிறது. இதற்கு மேலாக தென்னிலங்கையில் உள்ள அரசியல்வாதிகளுடன் எப்பொழுதும் நல்லுறவையும் வளர்த்து வந்திருக்கின்றார். இந்த வகையில் இராணுவம் பொலிஸார் தங்களுக்கும் வடக்கு மாகாணத்தில் தமிழ் மொழியை கற்றுத் தருமாறு ஆளுநர் மதிப்பிற்குரிய ஜீவன் தியாகராஜா ஊடாக அவரிடம் வேண்டுகோள் விடுத்த போது எவ்வித மறுப்புமில்லாமல் வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் பொலிஸாருக்கு தமிழ் சிங்களம் ஆகிய 2 மொழிகளுக்குமான வகுப்புக்களை அன்றையதினமே கௌரவ விஜயதாச ராஜபக்ச ஆரம்பித்து வைத்தார். இவ்வாறு கௌரவ நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச அவர்கள் தேசமான்ய M.T.S. இராமச்சந்திரனின் சேவையை பாராட்டி அந்த சந்தர்ப்பத்தில் இலங்கை அரசாங்கத்தின் இராஜதந்திர பணியை இலங்கையில் உள்ள மற்ற மாவட்டங்களுக்கும் உலகநாடுகளில் வாழும் இலங்கை மக்களுக்கு தேர்ச்சி பெற்ற இராஜதந்திரியாக தங்களை நியமனம் செய்வதற்கு திரு.இராமச்சந்திரனிடம் வேண்டுகோள் விடுத்தார் நீதி அமைச்சர். ஏனென்றால் அவர் 40 வருடங்கள் ஜேர்மனியில் வாழ்ந்தது மட்டுமல்ல பலகோணங்களில் சட்டத்தரணியாக, சமூகசேவையாளராக, இராஜதந்திரமாக, தூரநோக்கு சிந்தனையுடன் அரசியல் சிந்தனை இல்லாமல் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார். மிக விரைவில் இலங்கை அரசாங்கம் உலக நாடுகளில் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கும் அவரை இராஜதந்திரியாக நியமனம் வழங்குவதற்கும் அரசாங்கத்தின் பிரதிநிதியாக வேண்டுகோள் விடுத்தார் நீதி அமைச்சர் கௌரவ விஜயதாச ராஜபக்ச. (12054)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 87

# அம்மாவுக்கு மகள் எழுதிய மடல்



ப்ளீஸ் என்று ஒத்த வார்த்தை சொன்னாலே உருகி கரைந்து விடுவார் என் அப்பா..

ஆனால் அம்மா அப்படி இல்லை.. ஒரு காரியத்தை அவரிடம் சாதித்து கொள்வது சுலபமான விடயம் இல்லை..

சமையல் அறையில் அம்மா வியர்க்க விறுவிறுக்க எங்களுக்காக சுய மரியாதையை தொலைத்து நின்றிருந்த தருணங்கள் ஏராளம்..

துணி காயப்போடு அலமாரியில் அடுக்கி வை.. எப்பபாரு டிவி.... புத்தகம் எடுத்து படி... வீட்டு வேலை செய் , கல்யாணம் பண்ணி போற இடத்துல என்ன நினைப்பாங்க. சரியா வளர்க்கலேன்னு என்னை திட்ட மாட்டாங்களா"

என்று நை.. நை.. புகைச்சல் காதில் விழும்போதெல்லாம் உச்சத்தின் எரிச்சலுக்கு என்னை இட்டுச் சென்றது.. இன்று சாம்பார் சூப்பர்,

வத்தக்குழம்பு சூப்பர் என்று அடுத்தவர் என்னை பாராட்டும் போதுதான் அந்த குடைச்சலின் பெருமை அப்பத்தான் மெல்ல என் மரமண்டைக்கு விடயம் ஏற ஆரம்பித்தது..

இதிலும் நான்தான் தோற்று போனேன். இருந்தாலும் இந்த அம்மாவுக்கு இவ்வளவு கல்நெஞ்சம் இருக்கக்கூடாது.. அப்போது தான் நூடுல்ஸ் வந்த புதிது..அதன் மீது அப்படி ஒரு பிரியம் வந்துவிட்டது..ஒருநாள் அதை வாங்கி சாப்பிட 5 ரூபாய் கேட்டால் ,தர முடியாது என்ற ஒற்றை வார்த்தையை அழுத்தமாக சொல்லிவிட்டார்..

உங்க சமையல் வெறுப்பா இருக்கும் அம்மா, நூடுல்ஸ்தான் வேணும்.

என்று அழுதாலும் ஒரு பதிலும் அங்கு வரவே வராது.. 5 ரூபாய் தராத அம்மா எல்லாம் ஒரு அம்மாவா? என்று நொந்து போய் அழுதபடியே அன்று தூங்கிவிட்டேன். மறுநாள் காலை தூங்கி எழுந்தால், வீட்டுக்கு வந்த பாத்திர வியாபாரியுடன் அம்மா பேசி கொண்டிருந்தார்.அந்த வியாபாரி கையிலும், சுற்றிலும் புதுபுது பாத்திரங்கள் கண்களை கூசின.

ஆமா.. எல்லா பாத்திரத்திலயும் என் பொண்ணு பெயரை பெரிசா பொறிச்சிடுங்க..

செலவு பத்தியெல்லாம் கவலைப்படாதீங்க என்று சொல்லி கொண்டிருந்தார்.. இன்று வரை ஒரு டம்பளரில் தண்ணீர் எடுத்து குடித்தாலும் அதில் உள்ள என் பெயர் என்னை குத்திக்காட்டி கொண்டே இருக்கிறது.

ஏனோ தெரியவில்லை, இப்போதுவரை நூடுல்ஸ் சாப்பிடும் எண்ணமும் எனக்கு வரவே இல்லை. இந்த விடயத்திலும் நான் தான் தோற்று போனேன். ஓயாத குடைச்சல், எப்பவுமே திட்டு, எப்பவுமே ஒரு அறிவுரை, அம்மா எப்பவுமே இப்படித்தானோ என்ற நினைப்பு இளம் வயதில் வந்தபடியே இருந்தது. நான் பிரசவ வார்டில் இருந்தபோது, அம்மா... என்று எத்தனை முறை கூப்பிட்டிருப்பேன் என்றே தெரியாது, குழந்தையை பெற்று கொண்டு வீடு வந்து சேர்ந்ததும் அவர் ஒரு நிமிடம் சும்மா இல்லையே..

இதை சாப்பிடு அதை சாப்பிடாதே இதை குடி இப்படி திரும்பு அப்படி படு, குழந்தையை இப்படி பிடிச்சு தூக்கு என்று சொல்லி கொண்டே இருந்தார். அவ்வளவு காலம் இல்லாமல், அம்மாவின் வயிற்றில் தழும்புகள், வடுக்களை அப்போதுதான் பார்த்தேன்.. பிரசவ போரில் நான் தந்த பரிசு போலும்.. அம்மா எப்பவும் போலவே தான் இருக்கிறார்.. நான்தான் ஒவ்வொன்றிற்கும் எரிச்சல், குடைச்சல், என டிசைன் டிசைனாக பெயர் வைத்து கொண்டு இருந்திருக்கிறேன் என்று. இப்போதும் நான்தான் தோற்றேன்.

எத்தனை விடயத்தில்தான் நான் இப்படி தோற்றுக் கொண்டே இருப்பேனோ தெரியாது..இந்த தொடர் தோல்வி எனக்கு பிடித்திருக்கிறது.. காரணம், என் அம்மா சளைக்காமல் வெற்றி பெற்று கொண்டே இருப்பதால். உலகின் தலை சிறந்த முதல் தியாகி அம்மா மட்டுமே.

சொக்கி போகும் முதல் உலக அழகிகளும் இவர்களே. உலகின் மிகப் பெரிய பொருளாதார மேதையுமே அம்மா மட்டுமே. எத்தனை இடர்பாடுகள், எத்தனை துயரங்கள், எத்தனை வலிகள் வந்தால் என்ன? உலக உருண்டையில் கலந்துவிட்ட இந்த தாய்மையானது அனைத்தையும் புரட்டி போட்டுக் கொண்டு மேலே சென்று கொண்டே இருக்கும்.

எல்லா அம்மாக்களுக்கும் சமர்ப்பணம்.



அருந்தவநேசன் ஷர்தியா

**அன்பு வாசகர்களே!**
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# சீனா, மியன்மாரில் நில நடுக்கம்

(பீஜிங்)

சீனாவின் வடமேற்கு அக்கி மாவட்டம் மற்றும் மியன்மாரில் நேற்று காலை மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

ரிக்டர் அளவுகோலில் 5.2 ஆக பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கம் 40.88 டிகிரி வடக்கு அட்சரேகையிலும் 78.14 டிகிரி கிழக்கு தீர்க்க ரேகையிலும் 10 கி.மீ. ஆழத்திலும் ஏற்பட்டுள்ளது. முன்னதாக நேற்று முன்தினம் அதி காலை 3.29 மணியளவில் சீனாவின் ஜின்ஜியாங் பகுதியில் ரிக்டர் அளவுகோலில் 4.3 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

இதேபோன்று மியன்மாரில் நேற்று ஏற்பட்ட திடீர் நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.0 ஆக பதிவானதாக தேசிய நிலநடுக்கவியல் மையம் தகவல் தெரிவித்துள்ளது. (4)

# பாம்பு தீவு மீது குண்டு மழை



(கீவ்)

உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி வரும் போர் 5 ஆவது மாதத்தை நெருங்கியுள்ளது. தற்போது கிழக்கு உக்ரைன் பகுதியில் ரஷ்யப் படைகள் கடுமையாக தாக்குதலை நடத்தி வருகின்றன.

இந்த நிலையில் கருங்கடல் பகுதியில் உக்ரைனின் பாம்பு தீவை ரஷ்யப் படைகள் சமீபத்தில் கைப்பற்றியது. அந்த தீவை மீட்க உக்ரைன் இராணுவத்தினர் தொடர்ந்து தாக்குதல் நடத்தினார்கள்..

இதையடுத்து பாம்பு தீவில் இருந்து ரஷ்யப் படைகள் வெளியேறின. இந்த நிலையில் பாம்பு தீவு மீது நேற்று முன்தினம் ரஷ்யப் போர் விமானங்கள் சரமாரியாக குண்டுகளை வீசியது. அதிநவீன இராணுவ தளவாடங்களை திரும்ப கொண்டு செல்ல முடியவில்லை. எனவே இராணுவ தளவாடங்களை அழிக்க ரஷ்யா தாக்குதல் நடத்தியிருக்கலாம் என்று உக்ரைன் தெரிவித்துள்ளது.(4)

# வறுமையால் ரூ.7000 ற்கு சிசுவை விற்ற பெற்றோர்

ஒடிசாவின் ஜாஜ்பூர் மாவட்டத்தில் வறுமையின் காரணமாக பிறந்த சில நாட்களே ஆன பெண் குழந்தையை ரூபாய் 7000 ற்கு விற்பனை செய்த சம்பவம் அரங்கேறியுள்ளது.

குழந்தை விற்கப்பட்டது தொடர்பாக, குழந்தைகள் வளர்ச்சி திட்ட அதிகாரி ஒருவர், சுரேஷ்தாஸ் மற்றும் அவரது மனைவி ஆகியோர் குழந்தை இல்லாத தம்பதிக்கு பிறந்த சில நாட்களே ஆன குழந்தையை ரூபாய் 7000ற்கு விற்றதாக பொலிஸில் புகார் தெரிவித்தனர்.

இதையடுத்து இந்த சம்பவம் வெளிச்சத்திற்கு வந்தது. இந்நிலையில், பொலிஸார் இது குறித்து விசாரணை நடத்தியதில் குழந்தை இருக்கும் இடம் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் பின்னர், பொலிஸார் சம்பேபால் கிராமத்தில் இருந்து விற்கப்பட்ட பெண் குழந்தையை மீட்டு குழந்தைகள் நலக் குழுவிடம் ஒப்படைத்தனர். (4)

அணு
தய
அ

(கீவ்)
உக்ரைன்
அச்சத்தில், அ
கதிரியக்கத்
அனுப்ப இருப்

புடின் உக்ரைன் மீ
ஒரு குறிப்பிடத்தக்க அளவி
பாதிப்பை ஏற்படுத்தக்கூடி
அணு ஆயுதத்தைப்
யோகிக்கக் கூடும் எனவ
பென்டகன் அதிகாரிக
நம்புகின்றனர்.
இந்நிலையில், உ
னடியாக போரை முடிவ
குக் கொண்டு வருவத

லிபிய
பாரா



(ரிபோலி)
லிபியாவின் கிழக்
நகரமான டோப்ருக்கி
உள்ள பாராளுமன்றத்
போராட்டக்காரர்கள் முற்
கையிட்டு, கட்டடத்தின் ஒ
பகுதிக்கு தீ வைத்து
ளனர்.
தொடரும் மின்வெட்
விலைவாசி உயர்வு மற்று
அரசியல் முட்டுக்கட்டைக்
எதிராக மற்ற லிபிய நக
ங்களில் பேரணிகள் நடந்
ள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வெளிநாடு

## உக்ரைன் மீது

# ணுகுண்டு தாக்குதலுக்கு

# யாராகும் ரஷ்யா!

## அமெரிக்கா தகவல்



**ங்)**

**ரைன் மீது புடின் அணுகுண்டு வீசலாம் என்ற
ந்தில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், அணுக்
பக்கத்தை உணரும் திறன் கொண்ட விமானங்களை
ப இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.**

க்ரைன் மீது
ந்தக்க அளவில்
படுத்தக்கூடிய
ந்த்தைப் பிர
கூடும் எனவும்
அதிகாரிகள்
ர்.
யில், உட
ாரை முடிவுக்
டு வருவதற்

காகவும், மேற்கத்தேய நாடுகளுக்கு ஒரு எச்சரிக்கை செய்தியை தெரிவிப்பதற்காகவும் ரஷ்யா அதைச் செய்யக்கூடும் எனவும் அமெரிக்க பாதுகாப்புத்துறை அதிகாரிகள் நம்புகின்றனர்.

எனவே, அணுக்கதிர் வீச்சை உணரக்கூடிய பல மில்லியன் மதிப்பிலான விசேட ஜெட் விமானங்களை உக்ரைனுக்கு வழங்க, அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

WC-135W Constant Phoenix என்னும் பெயரில் அழைக்கப்படும் இந்த இரகசிய ஜெட் விமானங்கள் மிகவும் முக்கியமான சொத்து எனவும் விமர்சிக்கப்பட்டுள்ளது.

புடின் சைபீரியாவில் ஒரு இரசாயன ஆயுதத்தைப் பரிசோதிப்பாரானால், அதிலிருந்து வெளியாகும் வாயுவை வானத்தில் பறந்தபடி உணர்ந்துகொள்ளும் திறன் கொண்டவை இந்த விமானங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# பியாவில் பாரிய ஆர்ப்பாட்டம்
# ராளுமன்றத்திற்கு தீ வைப்பு





ன் கிழக்கு
டாப்ருக்கில்
ளுமன்றத்தை
ரர்கள் முற்று
டடத்தின் ஒரு
வைத்துள்

மின்வெட்டு,
யர்வு மற்றும்
டுக்கட்டைக்கு
லிபிய நகர
ணிகள் நடந்து

தலைநகர் டிரிபோலியில், போட்டி நிர்வாகம் ஆட்சியைப் பிடித்துள்ள நிலையில், போராட்டக்காரர்கள் தேர்தலுக்கு அழைப்பு விடுத்தனர்.

அவர்களின் கோரிக்கைக்கு இடைக்கால ஒற்றுமை அரசாங்கத்தின் தலைவரான அப்துல் ஹமீட் டிபீபா ஆதரவு அளித்தார். அவர் நாட்டின் அனைத்து நிறுவனங்களும் மாற்றப்பட வேண்டும் என்று தெரிவித்தார். வாக்கெடுப்புக்கு வழி வகுக்கும் நோக்கில் ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் சபையின் தரகு பேச்சு வார்த்தைகள் சிறிய முன்னேற்றத்துடன் முடிவடைந்த ஒரு நாளுக்குப் பின்னரே இந்த அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு நேட்டோ ஆதரவு கிளர்ச்சியால் லிபியாவில் நீண்ட காலமாக ஆ[illegible]ாக கேர்னல் முய[illegible] பதவி நீக்கம் செய்ததில் இருந்து அங்கு குழப்பம் நிலவி வருகிறது.

எண்ணெய் வளம் மிக்க நாடான லிபியாவில் இருந்து ஐரோப்பாவிற்கு ஆயிரக்கணக்கானோர் புலம்பெயர்ந்து வருகின்றனர். ஒரு காலத்தில் ஆபிரிக்காவில் இலவச சுகாதாரம் மற்றும் இலவசக் கல்வியுடன் மிக உயர்ந்த வாழ்க்கைத் தர[illegible] (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலையை மணந்த மெக்சிக்கோ மேயர்



(மெக்சிகோ)

மெக்சிகோ நாட்டின் தென்மேற்கு பகுதியில் அமைந்துள்ள சிறிய நகரம் சான் பெட்ரோ ஹுவமெலுலா. இந்த நகரின் மேயராக இருந்து வருபவர் விக்டர் ஹ்யூகோ சோசா. இவர் தனது நகரம் இயற்கை வளத்துடன் செழிப்பாக இருக்க வேண்டி பழங்கால சடங்கின்படி பெண் முதலை ஒன்றை திருமணம் செய்தார்.

ஊர் பொதுமக்கள் திரளாக கலந்துகொள்ள பாரம்பரிய இசை முழங்க வண்ண மயமாக திருமண விழா நடந்தது. கிறிஸ்தவ முறைப்படி நடைபெற்ற திருமணத்தில் முதலைக்கு வெள்ளை நிற கவுன் அணிவிக்கப்பட்டிருந்தது. பாதுகாப்பு காரணங்களுக்காக பெண் முதலையின் வாய் கட்டப்பட்டிருந்தது. (4)

## 27 பேருடன்
# புயலில் சிக்கி மூழ்கும் கப்பல்
## மீட்கப் போராடும் கடற்படை

(பீஜிங்)

தென் சீனக் கடலில் இயக்கப்படும் என்ஜினீயரிங் கப்பல் ஒன்று, ஹாங்காங் அருகே புயலில் சிக்கி கவிழ்ந்துள்ளது. சுமார் 30 ஊழியர்களுடன் சென்று கொண்டிருந்த அந்த கப்பல், ஹாங்காங்கின் தெற்கே 300 கி.மீ தொலைவில் வெப்பமண்டல புயலில் சிக்கியது.

இதனால் கப்பல் கொஞ்சம் கொஞ்சமாக மூழ்கிக் கொண்டிருக்கிறது. தகவல் அறிந்த கடலோர காவல் படையின் மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். கப்பலில் சிக்கியிருந்தவர்கள் ஹெலிகொப்டர் மூலம் மீட்கப்படுகின்றனர். காற்று வேகமாக வீசுவதால் மீட்பு பணி கடும் சவாலாக காணப்பட்டது.

நேற்றுக் காலை வரை மூன்று நபர்கள் மட்டுமே மீட்கப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

இரண்டு பகுதிகளாக உடைந்து மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பலை கடுமையான அலை தாக்குவதும், ஒரு ஊழியர் மீட்பு ஹெலிகொப்டரில் ஏற்றும் காட்சிகள் இணையத்தளத்தில் பரவி வருகின்றன. (4)

# பிரித்தானியாவில் கொவிட் அதிகரிப்பு

(லண்டன்)

பிரித்தானியாவில் கொவிட் தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 32 சதவீதம் அதிகரித்து கிட்டத்தட்ட 2.3 மில்லியனாக அதிகரித்துள்ளது என்று சமீபத்திய புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

இது முந்தைய வாரத்தில் 1.7 மில்லியன் மக்களில் இருந்து அதிகரித்துள்ளது மற்றும் ஏப்ரல் பிற்பகுதியில் இருந்து மொத்த தொற்றுநோய்களுக்கான மிக உயர்ந்த மதிப்பீடாகும்.

ஒமிக்ரோன் வகைகள் பி.ஏ.4 மற்றும் பி.ஏ.5 ஆகியவை சமீபத்திய எழுச்சிக்கு பின்னால் இருக்கலாம் என்று தேசிய புள்ளியியல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அவை பிரித்தானியாவில் மிகவும் ஆதிக்கம் செலுத்தும் விகாரங்களாகக் கருதப்படுகின்றன. (4)

## எரிபொருள் பிரச்சினை

# தனியார் மருந்தகங்களுக்கான மருந்து விநியோகம் நிறுத்தம்

**கொழும்பு)**

**நாடு முழுவதும் உள்ள தனியார் மருந்தகங்களுக்கான மருந்து விநியோகம் முற்றாக நின்று போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

எரிபொருள் இல்லாத காரணத்தினால், மருந்து தொகைகளை தனியார் மருந்தகங்களுக்கு கொண்டு செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என அகில இலங்கை மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சந்திக்க கன்கந்த தெரிவித்துள்ளார்.

மருந்து விநியோகத்திற்கு முக்கியத்துவம் வழங்க அதிகாரிகள் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மருந்துகளை இறக்குமதி செய்ய முடியாது போயுள்ளது.

அத்துடன் அரச மருத்துவமனைகளிலும் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால், நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார துறையினர் தெரிவித்துள்ளனர். (4)

# பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெருமளவு எரிபொருள் மீட்பு

## ஒருவர் கைது

(முறிகண்டி)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கரடிப்போக்கு பகுதியில் 34 கொள்கலன்களில் எரிபொருள் மீட்கப்பட்டதுடன் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலிற்கு அமைவாக குறித்த பகுதியில் உள்ள வீடு சுற்றிவளைக்கப்பட்டு சோதனையிடப்பட்டது.

இதன்போது, குறித்த காணியிலிருந்து 33 கொள்கலனில் டீசலும், 1 கொள்கலனில் பெற்றோலும், மற்றுமொரு கொள்கலனில் 25 லீற்றர் மதிக்கத்தக்க மண்ணெண்ணையும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இதன் படி ஏறத்தாழ 6800 லீற்றர் டீசலும், 200 லீற்றர் பெற்றோலும் சட்டத்திற்கு முரணாக உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் வீட்டு உரிமையாளரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட உள்ளதாகவும், இதன்போது சான்றுப் பொருட்களும் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் டீசல் லீற்றர் ஒன்று 1700 ரூபாவிற்கும், பெற்றோல் லீற்றர் ஒன்று 3000 ரூபாவிற்கும், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்று 1500 ரூபாவிற்கும் கறுப்பு சந்தையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (4-6-100-316)



சிவபூமி அறக்கட்டளை நிர்வாகத்தின் ஏற்பாட்டில் தென்னிந்திய சிற்பக் கலைஞ ரால் நிர்மாணிக்கப்பட்ட சுமார் 27 அடி உயரமான சிவன் திருவுருவச்சிலை மற்றும் நந்தியெம்பெருமானின் திருவுருவச் சிலைகள் நேற்றுக் காலை திருக்கேதீச்சர பாலாவி தீர்த்தக்கரை அருகே திறந்து வைக்கப்பட்டன.

(படங்கள்:-சிவசாந்தன், [illegible], யோசப்நயன்)

## பொருளாதார நெருக்கடி

# தங்க நகைகளை விற்கும் மக்கள் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

தங்க நகைகளை விற்பனை செய்யும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அகில இலங்கை நகை வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் தங்களிடம் உள்ள தங்க நகைகளை விற்பனை செய்வதாக அந்த சங்கத்தின் தலைவர் ஏ.விஜயகுமார் தெரிவித்தார்.

அத்துடன் புதிதாக தங்கத்தை கொள்வனவு செய்வோரின் எண்ணிக்கையும் 5 முதல் 10 சதவீதம் வரையில் வீழ்ச்சியடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார். (4)

# கடல் அலையில் சிக்கி யுவதி உயிரிழப்பு

0

பமுனுகம, உஸ்வெட்டகெய்யாவ பிரதேசத்தில் கடல் அலையில் நடந்து சென்ற யுவதி ஒருவர் அலையில் சிக்கி கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

கடற்கரையில் உலாவச் சென்று கொண்டிருந்த போதே இவ்விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கடவத்த, பியன்வில பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக விசாரணைகளை பமுனுகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4)

## சீருடையைப் பயன்படுத்தி

# பெற்றோல் பெற்ற முன்னாள் கடற்படை வீரர் கைது

(கொழும்பு)

கடற்படை சீருடையினை பயன்படுத்தி 45 லீற்றர் பெற்றோலினை பெற்றுக்கொண்ட முன்னாள் கடற்படை வீரர் ஒருவரை கம்பளை மாவட்ட நீதிமன்ற நீதிவான் ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவித்துள்ளார்.

அங்கம்மன பிரதேசத்தைச் சேர்ந்த முன்னாள் கடற்படை வீரர் ஒருவருக்கே இவ்வாறு பிணை வழங்கப்பட்டுள்ளது

குறித்த நபர் கம்பளை - கண்டி வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிலையத்திற்கு கடற்படை சீருடையுடன் வந்து கடற்படைக்கு சொந்தமான படகு ஒன்றுக்கு தேவையென கூறி பீப்பாய் ஒன்றில் 45 லீற்றர் பெற்றோலினை பெற்றுகொண்டுள்ளதாக தெரிய வருகிறது.

மேற்குறிப்பிட்ட சந்தேக நபர் கடற்படை ஒழுக்க விதிமுறைகளை மீறி தன் சொந்த தேவைக்காக சீருடையுடன் வந்து பெற்றோல் பெற்றுகொண்டமை தொடர்பாக தலாத்து ஓயா கடற்படை முகாம் பொறுப்பதிகாரி புவனேக ஆதித்ய விஜே விக்கிரமவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து அவர் கம்பளை பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியதைத் தொடர்ந்து இவ்வாறு பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (4)

# நிலுவை பணம் செலுத்தாவிட்டால் விநியோகம் இடம்பெறாது

## எரிபொருள் விநியோகஸ்தர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு இதுவரை எரிபொருளை விநியோகித்து வந்த ஏழு விநியோகஸ்தர்களுக்கு செலுத்த வேண்டிய 655 மில்லியன் டொலர் நிலுவை பணத்தை செலுத்தும் விதம் தொடர்பான திட்டத்தை முன் வைக்கும் வரை எரிபொருள் விநியோகம் நடைபெறாது என அந்த விநியோகஸ்தர்கள் அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளனர்.

655 மில்லியன் டொலர் நிலுவை பணத்தில் 300 மில்லியன் டொலர்களை போட்ரோ சைனா நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியுள்ளது.

இதனைத் தவிர மேலும் ஆறு விநியோகஸ்தர்களுக்கு 355 மில்லியன் டொலர் நிலுவை பணத்தை செலுத்த வேண்டியுள்ளது.

கடனை செலுத்தும் திட்டத்துடன் சிறிய தவணை பணத்தையேனும் செலுத்துவதாக அரசாங்கம் வாக்குறுதி வழங்கினால், எரிபொருள் விநியோகத்தை மீண்டும் ஆரம்பிக்க தயாராக இருப்பதாக இந்த சர்வதேச எரிபொருள் விநியோகஸ்தர்கள் அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத்தின் ஊடாக பதில் ஜனாதிபதிக்கு சாத்தியம்

## ஆளும் தரப்பு எம்.பி. தெரிவிப்பு



**(கொழும்பு)**

**பாராளுமன்றத்தின் ஊடாக பதில் ஜனாதிபதி ஒருவரை நியமிப்பதற்கான சாத்தியம் அதிகளவில் உள்ளது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார நெருக்கடி இலங்கைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல என பொதுஜன பெரமுனவின் ஒரு சிலர் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

வரலாற்றில் என்றுமில்லாத வகையில் நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளமைக்கு தவறான பொருளாதார முகாமைத்துவம் பிரதான காரணியாக உள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவியில் வைத்துக் கொண்டு எப்பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது. அரச நிர்வாகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தோல்வி என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என தெரிவித்தார். (4)

# முழுமையாக முடங்கவுள்ள தனியார் பேருந்து சேவை

(கொழும்பு)

தனியார்பேருந்துசேவையை முழுமையாக நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இன்று முதல் நாடு முழுவதும் தனியார் பேருந்து சேவையை முழுமையாக நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்து சேவையை தொடர்ந்து கொண்டு செல்லும் நோக்கில் தனியார் பேருந்துகளுக்கு இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சாலைகளில் எரிபொருளை வழங்குமாறு அரசாங்கம் இதற்கு முன்னர் அறிவுறுத்தியது. எனினும், இலங்கை போக்குவரத்து சபையின் சில பிரதேச பேருந்து சாலைகளில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே எரிபொருள் வழங்கப்படுகிறது. அத்துடன் சில இடங்களில் எரிபொருள் வழங்க மறுக்கப்படுகிறது என தெரிவித்தார். (4)

# டழஸ் அழகப்பெரும தலைமையில் புதிய அரசியல் கூட்டமைப்பு

## பேராசிரியர் திஸ்ஸ தகவல்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தலைமையில் புதிய அரசியல் கூட்டணியை ஸ்தாபிக்க பாராளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் உறுப்பினர்கள் அவதானம் செலுத்தியுள்ளார்கள்.

நாட்டு மக்கள் இனியொரு போதும் ராஜபக்ஷர்கள் தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவிக்கமாட்டார்கள் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் வினவிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமூக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள எப்பிரச்சினைக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தீர்வு பெற்றுக்கொடுக்கவில்லை.

கடந்த காலங்களை காட்டிலும் தற்போது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளார்கள். எரிபொருள் பற்றாக்குறை முழு நாட்டையும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது.

அரசியல் ஸ்திரமற்ற தன்மைக்கு இதுவரை தீர்வு எட்டப்படவில்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகிறார்கள்.

அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணாமல் பொருளாதார நெருக்கடிக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது என்பதை சகல அரசியல் தரப்பினரும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

சர்வகட்சிகளையும் ஒன்றிணைத்து இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபித்து பொதுத் தேர்தலுக்குச் சென்று, சிறந்த தீர்வு காண வேண்டும் என்பதை மகாநாயக்க தேரர்கள் தொடர்ந்து வலியுறுத்துகிறார்கள். சர்வகட்சி தலைமையிலான அரசாங்கத்தை ஸ்தாபிப்பதில் ஜனாதிபதி அவதானம் செலுத்தவில்லை. அரசியல் சூழலை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு பதவி காலத்தை நிறைவு செய்யும் முயற்சியினை மாத்திரம் ஜனாதிபதி முன்னெடுக்கிறார் என தெரிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மின் துண்டிப்பு

# மருத்துவமனை லிப்டில் சிக்கிய 10 பேர்

(கொழும்பு)

கல்கமுவ மருத்துவமனையில் திடீரென ஏற்பட்ட மின் தடையால் 10 பேருக்கு ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை மின்சாரம் துண்டிக்கப்பட்ட போது, மருத்துவமனையில் இயங்கிய லிப்ட் இடைநடுவில் சிக்கிக் கொண்டுள்ளது. இதன் போது சுமார் பத்து பேர் லிப்டில் சிக்கியுள்ளதாக தெரியவந்துள்ளது.

குறித்த குழுவினர் சுமார் 20 நிமிடத்திற்கு மேல் லிப்டில் சிக்கிக் கொண்டதாகவும் தெரிய வந்துள்ளது. குறித்த நேரத்தில் மருத்துவ மனையின் ஜெனரேட்டர் இயங்காத காரணத்தினால் இந்நிலை நிலை ஏற்பட்டுள்ளது. (4)

# ரஷ்ய பயணம் பிற்போடப்பட்டது



(கொழும்பு)

இலங்கை பிரதிநிதிகள் குழுவொன்று இந்த வார இறுதியில் ரஷ்யா செல்லவிருந்த போதிலும் குறித்த பயணம் பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் இருந்து எரிபொருள் மற்றும் உரங்களை கொள்வனவு செய்வது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இலங்கை குழுவொன்று ரஷ்யா செல்ல தயாரானது. ரஷ்யா செல்லவிருந்த குழுவில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் கலாநிதி சமன் வீரசிங்க ஆகியோர் உள்ளடங்குவதாக கூறப்பட்டது.

முன்னதாக அறிவித்தபடி இந்த வாரம் விஜயம் நடைபெறாது என்று கூறப்படுகிறது.

எனினும் இலங்கை குழுவினரின் வரவேற்பை ரஷ்யா ஒத்திவைத்துள்ளதாக தெரியவருகிறது. (4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 260 | 220 | 200 | 320 |
| உருளைக்கிழங்கு | 300 | 150 | 250 | 280 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 450 | 600 |
| தக்காளி | 450 | 250 | 300 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 200 | 160 |
| கோவா | 300 | 300 | 320 | 360 |
| கரட் | 250 | 350 | 350 | 360 |
| பூசணி | 200 | 200 | 240 | 240 |
| புடோல் | 160 | 150 | 160 | 240 |
| வாழைக்காய் | 120 | 90 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 200-500 | 480 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 200 | 220 |
| பாகற்காய் | 450 | 300 | 450 | 600 |
| வெண்டிக்காய் | 200 | 150 | 150 | 320 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 240 | 240 |
| பயற்றங்காய் | 250 | 280 | 250 | 280 |
| லீக்ஸ் | 200 | 220 | 250 | 300 |
| பீற்றூட் | 280 | 300 | 250 | 320 |
| கறிமிளகாய் | 280 | 350 | 480 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 400 | 400 |
| போஞ்சி | 350 | 400 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 240 | 150 | — | 280 |
| கீரை - 1 பிடி | 120 | 50 | 80 | 80 |
| தேசிக்காய் | 350 | 350 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 50-80 | 50-70 |
| இராசவள்ளி | 200 | 240 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 350 | 300 | 400 | 400 |
| முள்ளங்கி | 160 | 100 | — | 180 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 80 | 140 | — | 150 |



# சிறுவர் அரங்கம்

(நேற்றைய தொடர்ச்சி)

## அம்புலிமாமா

## கல் மனம் கரைந்ததே!

அது கேட்டு ஜெயசேனன் "நான் திரும்பிப் போவதென்றால் சந்திரிகாவுடன்தான்போவேன். அவள் இல்லாமல் எனக்கு வாழ்வே இல்லை. அதனால் காட்டிற்குள் போய் ராட்சஸனை எதிர்க்கத்தான் போகிறேன்" என்று கூறி பல்லூகவனத்திற்குள் சென்றான்.

அக்காடு அடர்ந்த மரங்களாலும் முட் புதர்களாலும் நிறைந்திருந்தது. ஜெயசேனன் கொஞ்ச தூரம் போனதுமே யாரோ அவன் கண்களை அவன் பின்னாலிருந்து பொத்தினார்கள். ஜெயசேனன் திணறித் திரும்பிப் பார்த்தபோது ஒரு பயங்கர ராட்சஸனை அங்கு கண்டான். அவன் கண்கள் நெருப்புத் தனல் போலிருந்தது. தலைமுடியோ முட்புதர்



போலிருந்தது. அவன் "நான் தான் பல்லூகன். காட்டுக்கு வெளியே இருந்த அரசகுமாரர்கள் உன்னை எச்சரிக்கவில்லையா? அதைக் கேட்டு நீ பயப்பட்டு விடவில்லை போலிருக்கிறதே. நீ துணிச்சலுடன் இக்காட்டிற்குள் வந்திருக்கிறாய். அதற்காக உன்னைப் பாராட்டுகிறேன். என்னைக் கொன்று விட முடியும் என்றா நீ நினைக்கிறாய்?" என்று கேட்டான்.

ஜெயசேனனும் "நான் உன்னைக் கொல்ல வேண்டும் என்று வரவில்லை. என் சந்திரிகாவை அடையவே வந்திருக்கிறேன்" என்றான். பல்லூகனும் "இந்த உன் ஆசை உன் உயிரையே வாங்கி விடும். பேசாமல் இங்கிருந்து போய் விடு. உன்னை நான் ஒன்றும் செய்ய மாட்டேன்" என்றான்.

ஜெயசேனனோ "என் சந்திரிகா இல்லாமல் இங்கிருந்து நான் போக மாட்டேன். என் உயிர் போவதைப் பற்றிக் கவலை இல்லை" என்றான். பல்லூகன் அவனைப் பாராட்டுபவன் போலப் பார்த்து "அப்படியானால் சந்திரிகாவை நீ அடைய ஒரு வழி சொல்கிறேன். அதற்கு நீ தளதள வெனக் கொதிரக்கும் எண்ணெயில் குளிக்க வேண்டும்.

அதற்குத் தயாரா? இல்லையென்றால் உன்னை ஒரு தவளையாக மாற்றி விடுவேன். நீயும் ஏதாவது ஒரு பாம்பிற்கு இரையாகி விடுவாய். ஒருவேளை நீ தப்பி இந்தக் காட்டிற்கு வெளியே போய் விட்டால் உன் சுய உருவத்தை நீ அடைந்து விடுவாய். என்ன செய்யப் போகிறாய். சொல்" என்று கேட்டான்.ஜெயசேனனோ "நான் கொதிக்கும் எண்ணெயில் குளிக்கத் தயார்" என்று பயப்படாமல் கூறினான்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## யுத்த காண்டம்

**148**



"பகைவன் பிடியில் இருந்த அவளை மாசுபடிந்தவள் என்று உலகம் நினைக்க வாய்ப் புண்டு" எனக் கருதி அவளை ஏற்கத் தயங்கினான்; "இவளா என் மனைவி?" என்ற நாடகத்தை நடித்துக் காட்டினான். இலக்குவன் பதறிப்போனான்; வானவர் அழுது விட்டனர்; பேய்களும் சீதைக்காகக் கண்ணீர் விட்டன.

இராமன், 'அவள் விரும்பினால் தீக்குளிக்கலாம்' என்று கூறினான்; அவளை இராவணனே தீண்ட முடியவில்லை; தீ மட்டும் எப்படி அவளைத் தீண்டும்? தேர்வில் வெற்றி கண்டாள் அவள் தூய்மை நிறுவப்பட்டது. "அவள் கற்பில் மாசு ஏற்படவில்லை" என்பதை உலகம் அறியச் செய்தான். இராமன் அதற்கே இந்நாடகத்தை நடத்தினான்.

பரதன், இராமன் வருகைக்காகக் காத்து இருந்தான்; உயிர் விடுதற்குக் காலம் தாழாமல் இருக்க, நெருப்பை மூட்டி வலம் வந்தான் உயிர் காக்கும் உறுதுணைவனாய் அனுமன் செயற்பட்டான். குறித்த நேரத்தில் இராமனும் மற்றையோரும் அங்கு வந்து சேர்ந்தனர்; அனுமன் அவசரச் செய்தியாய் முன்வந்து பரதனைச் சந்தித்தான்.

எல்லாம் இனிமையாய் முடிந்தன; அவற்றைச் சொல்லச் சொற்கள் போதா, இதோ கம்பன் கவி!

**அரியணை அனுமன் தாங்க, அங்கதன் உடைவாள் ஏந்த**
**பரதன் வெண்குடை கவிக்க இருவரும் கவரி பற்ற**
**விரை செறி கமலத் தாள்சேர் வெண்ணெய் யூர்ச் சடையன் தங்கள்**
**மரபுளோர் கொடுக்க வாங்கி, வசிட்டனே புனைந்தான் மௌலி!**

அரியணையை அனுமன் தாங்கினான்; அங்கதன் உடைவாள் ஏந்தினான்; பரதன் வெண்கொற்றக்குடை கவிழ்த்தான்; இலக்குவனும் சத்துருக்கன இளைஞனும் கவரி வீசினர்; திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்த சடையப்ப வள்ளல் மரபில் வந்தவர் எடுத்துக் கொடுக்க, வாங்கி, வசிட்டரே இராமனுக்கு முடி சூட்டினார்.

"தீமைகள் தோன்றுதலைத் தவிர்க்க முடியாது; அவை படைப்பின் செயற்பாடு; என்றாலும் அவை என்றும் நிலைத்து நின்று வெற்றி பெறுதல் இல்லை" என்பது இக் காவியம் தரும் படிப்பினை; வாழ்க உலகெலாம்.

**வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்;**
**திண்மை இல்லை நேர் செறுநர் இன்மையால்;**
**உண்மை இல்லை பொய்யுரை இல்லாமையால்**
**வெண்மை இல்லை பல்கேள்வி மேவலால்.**

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மையும் நல்லெண்ணமும் இருக்கின்றபோதெல்லாம் இறைவனின் உதவியும் உள்ளது!
– ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## திருக்கேதீச்சரப் பெருமானின் திருக்குடமுழுக்குக் காண்மினே!

மன்னார் மாதோட்ட நன்னகரில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் கௌரி அம்பாள் சமேத திருக்கேதீச்சர பெருமானுக்கு எதிர்வரும் 6ஆம் திகதி மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

சிவபூமி என்று போற்றப்படும் இலங்கைத் திருநாட்டின் ஆதிக்கோயிலாக விளங்கும் ம்ன்னார் திருக்கேதீச்சரம் பாடல் பெற்ற திருத்தலம்.

தமிழகத்தின் இராமேஸ்வரத்தில் நின்று திருக்கேதீச்சரப் பெருமான் மீது திருஞான சம்பந்தரும் சுந்தரமூர்த்தி நாயனாரும் திருமுறை பாடிப் பணிந்தேத்தினர் என்பதற்குள் திருக்கேதீச்சர ஆலயத்தின் தொன்மை அறிதற்குரியது.

எனினும் சிவபூமியாக விளங்கிய இந்த மண்ணில் சைவ சமயத்தை வேரறுக்க பல்வேறு சக்திகள் கடும் பிரயத்தனம் செய்தன செய்கின்றன.

இதனால் திருக்கேதீச்சர ஆலயம் சிதைவுற்றதாயினும் உலகுவாழ் சைவ மக்களின் இதயங்களைக் கோயிலாகக் கொண்ட திருக்கேதீச்சர பெருமான் மஞ்ஞைகள் நடமிடும் மாதோட்ட நன்னகரில் மீண்டும் நிலை பெற்று தன் அரசாட்சியை – அருளாட்சியை வழங்கி நிற்கின்றான்.

ஆம், பாவம் அறுக்கும் பாலாவி எனும் புண்ணிய தீர்த்தத்தை கொண்டமைந்த திருக்கேதீச்சர நாதனின் ஆலயத் திருப்பணிக்கு இந்திய அரசாங்கம் நிதியுதவி வழங்கியதெனில் அதற்குக் காரணம் இலங்கைத் திருநாட்டின் வரலாற்றுத் தொன்மைமிகுந்த சிவ ஆலயமாக திருக்கேதீச்சரம் விளங்குவதாகும்.

இத்தகு வரலாற்று சிறப்புமிக்க திருக்கேதீச்சரப் பெருமானின் ஆலயம் புனர்மைக்கப்பட்டு எதிர்வரும் 6ஆம் திகதி திருக்குடமுழுக்கு காண இருப்பது நாம் செய்த தவப் பயனாகும்.

அதிலும் திருக்கேதீச்சரப் பெருமானின் திருக்குடமுழுக்கை நடத்தி வைப்பதற்கு உள்நாட்டில் உள்ள அந்தணச் சிவாச்சாரியர்களுடன் இந்தியாவில் இருந்தும் அந்தண சிரேஷ்டர்கள் வருகை தந்துள்ளனர்.

இதற்கு அப்பால், பக்திபூர்வமாகத் திருமுறைகளைப் பாராயணம் செய்யவல்ல ஓதுவார்களும் தமிழகத்தில் இருந்து திருக்கேதீச்சர ஆலயத்தை வந்தடைந்துள்ளனர்.

இவை ஒருபுறம் நடந்தாக மறுபுறத்தில் இலங்கைத் தீவின் அனைத்துப் பாகங்களிலிருந்தும் கேதீச்சரநாதனின் திருக்குடமுழுக்கைக் காண்பதற்காக அலையெனத் திரண்டு வருகின்ற அடியார் கூட்டத்தால், மாதோட்ட நன்னகர் பொலிவுகண்டுள்ளது.

இந்தநேரத்தில் திருக்கேதீச்சரப் பெருமானின் திருக்குடமுழுக்கோடு பாவம் அகன்று இலங்கை மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டி நாம் அனைவரும் பிரார்த்திப்போம்.

கூடவே கேதீச்சரப் பெருமானின் திருக்குடமுழுக்கை க்ண்டுற்று பேரின்பப் பெருவாழ்வை பெற்றுய்வோமாக.

## மன்னார் மாவட்டத்தில் எரிபொருள் விநியோகத்தில் புதிய நடைமுறை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பெற்றோல் விநியோகம் தொடர்பாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை விசேட அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளார்.

அதற்கு அமைவாக நாளை 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் மன்னார் மாவட்டம் முழுவதும் பிரதேச செயலகங்கள் ஊடாக வாகனங்களுக்கென வழங்கப்படும் எரிபொருள் அட்டையின் அடிப்படையில் பெற்றோல் விநியோகிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு விஷேடமாக வழங்கப்படும் எரிபொருள் விநியோகத்தின் போது சுகாதார திணைக்களத்தினால் வழங்கப்படும் அட்டையுடன் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட எரிபொருள் விநியோக அட்டையையும் கொண்டுவருதல்அவசியம்

இது மன்னார் மாவட்ட உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே பொருந்தும். தற்போது மாவட்டத்தில் இரண்டு ஐ.ஓ.சி (I.O.C) எரிபொருள் நிரப்பு நிலையத்தினால் வழங்கப்பட்டாலும் எதிர்வரும் 15 ஆம் திகதியின் பின்னர் ஏனைய எரிபொருள் நிலையங்களுக்கும் எரிபொருள் கிடைக்கப்பெற்றால் கிராமங்களுக்கு அருகில் உள்ள நிலையங்களில் வழங்கக்கூடியதாக இருக்கும்.

மாந்தை மேற்கு பிரதேசத்தில் எரிபொருள் நிலையம் இல்லாமையால் அருகிலுள்ள நிலையத்தினூடாக வழங்கப்படும். இதேபோன்று முசலி மற்றும் மடு பிரதேச வாகனங்களுக்கும் அண்மைய நிலையங்களில் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (4,7,283)

## 300 லீற்றர் டீசலுடன் அளவெட்டியில் ஒருவர் கைது

(அராலி)

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அளவெட்டி மத்தி பகுதியில் 42 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் 300 லீற்றர் டீசலுடன் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் டீசலை வீட்டில் பதுக்கி வைத்திருப்பதாக தெல்லிப்பழை பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு தகவல் கிடைத்தது. குறித்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் தெல்லிப்பழை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4,7,104)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை 05 ஆம் திகதி காலை 8.00 மணியிலிருந்து மாலை 5 மணிவரை.

**யாழ். பிரதேசத்தில்** விஜிதா அரிசி ஆலை, அட்டகிரி, மாப்பியன் சுதுமலை, மூத்த விநாயகர் கோவிலடி, நவாலி, கலையரசி வீதி நவாலி, பத்தனை, Simmaya Bharathi, Suthumalai, சென்ட் பீட்டர்ஸ் வீதி நவாலி, சுதுமலை, வேலக்கை பிள்ளையார்-நவாலி, சீனோர்-படகு துறை காரைநகர, கடற்படை தளம்காரைநகர், காரை நகர் கடற்படை முகாம், இ.போ.ச டிப்போ காரைநகர், களபூமி, பாலக்காடு அம்மன் கோவிலடி காரைநகர், தோப்புக்காடு காரைநகர், ஊரி காரைநகர் ஆகிய ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** ஜீவன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை-காத்தான் கோட்டம, கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளி னிக், மறக்கறம்பளை- கணேசபுரம், சூடுவெந்த புலவு ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** உயிர்த்தரசங்குளம், ஆகிய இடத்திலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** 18 ஆவது வி.ஐ.ஆர் இராணுவ முகாம்-தேவிபுரம், 68ஆம் பிரிவு இராணுவ முகாம் இரணைப்பாலை, 68ஆவது பிரிவு - டயலொக் கோபுரம் இரணைப்பாலை, தேவிபுரம் ஆகிய பிரதேசங்களிலும்மின்சாரம்தடைப்படும்.

## மல்லாகம் கோட்டைக்காடு சாளம்பை முருகமூர்த்தி ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கோட்டைக்காடு அருள்மிகு சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும் 15 ஆம் திகதி அதிகாலை 5 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளதாக ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (4,7)

## இன்றும் நாளையும் 3 மணி நேர மின்வெட்டு

(கொழும்பு)

இன்றும் நாளையும் 3 மணிநேர மின்வெட்டு அமுலுக்கு வருவதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் இலங்கை மின்சார சபை அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி, M,N,O வலயங்கள் தவிர, பகலில் 1 மணி 40 நிமிட மின் வெட்டு இருக்கும்.

இரவில் 1 மணி 20 நிமிடம் மின்சாரம் துண்டிக்கப்படும். (4,7)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை



அன்பும் கருணையும் உடைய தெய்வ நிலையானது விண் முதல் ஆறறிவாகி,மனித மனத்தின் மூலம் தனது பரிணாமப் பயணச் சரித்திரத்தை உள்ளுணர்வாகக் காட்டிய பேரறிவிற்கு நன்றி கூறுமிடத்து, அத்தகு உள்ளுணர்வு அடைந்த நம்மையே இறைநிலைக்கு அர்ப்பணம் செய்து மகிழ்ச்சியடைவோம்.

மேலும் உலக வாழ்வில் உயிரினங்களின் உற்பத்திக்கு ஏற்ற வகையில் பெண்ணிணத்தை வடிவமைத்து எல்லா உயிர்வகைக்கும் அன்பு காட்டி, கருணையை வழங்கிக் காக்கும் அந்தப் பேராதார இறைநிலைக்கு நன்றி கூறி மனநிறைவு பெறுவோம்.

எல்லா உயிர் வகைகட்கும், உணவாகவும் வாழ்க்கை வசதிகளாகவும் சிக்கலில்லாமலும் வரையறை இன்றியும் தங்களது வளர்ச்சியை அர்ப்பணித்து உலகைக் காத்து வருகின்றன தாவர இனங்கள்.

அத்தகு தாவர வர்க்கங்களை அன்போடும், கருணையோடும் உருவாக்கி இதர உயிரினங்களுக்கு அளித்துள்ள பேரன்புக்காகவும் கருணைக்காவும் இறைநிலைக்கு நன்றி கூறி அப்பெருமகிழ்ச்சியான பேரின்ப வெள்ளத்தில் திளைப்போம்.

ஒவ்வொரு நாளையும் இறைநிலையின் அன்பின் ஊற்றுப் பெருக்க நன்னாளாகவே கருதி என்றும் கொண்டாடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 22

இதன் பொருள், முதன்முறையாக அவர்கள் இலவச பொதுப் போக்குவரத்து, மானியமிக்க மருத்துவ சேவைகள், வருடாந்திர நாணய உதவி மற்றும் பொதுப் பயன்பாட்டு தள்ளுபடிகள் உள்ளிட்ட மூத்த சலுகைகளைப் பெற முடியும் (மேலும் சோவியத் ஒன்றியத்தின் சிவப்பு இராணுவம் Red Army போன்ற அதே சமூக நலன்களைப் முன்னாள் உக்ரைனிய வீரர்கள் பெறுவார்கள்). முன்னாள் உக்ரைனிய தேசியவாத போராளிகளுக்கு உத்தியோகபூர்வ மூத்த அந்தஸ்தை வழங்க பல முந்தைய முயற்சிகள் இருந்தன. ஆனால் அவை அனைத்தும் தோல்வியடைந்தன.

### போருக்குப் பிந்தைய காலத்தில் சோவியத் உக்ரைன் சோவியத் ஒன்றியத் தலைவர் ஸ்டாலினின் ஆட்சியின் கடைசி ஆண்டுகள்

போருக்குப் பிந்தைய புனரமைப்பு, சர்வாதிகாரக் கட்டுப்பாடுகள் மற்றும் பயங்கரவாதத்தின் மறுசீரமைப்பு மற்றும் மேற்கு உக்ரைனின் சோவியத்மயமாக்கல் ஆகியவை ஸ்டாலினின் ஆட்சியின் கடைசி ஆண்டுகளின் அடையாளங்களாகும்.

சோவியத் அதிகாரிகள் மீட்டெடுக்கப்பட்ட பிரதேசங்களில் கட்டுப்பாட்டை மீண்டும் நிறுவியதால் பொருளாதார மறுசீரமைப்பு உடனடியாக மேற்கொள்ளப்பட்டது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டமானது, போருக்கு முந்தைய ஆண்டுகளில் இருந்ததைப் போலவே, கனரகத் தொழில்துறையை நுகர்வோர் தேவைகளுக்குக் கேடு விளைவிக்கும் வகையில் வலியுறுத்தியது. 1950 வாக்கில், உக்ரைனின் தொழிற்றுறை உற்பத்தி போருக்கு முந்தைய அளவை விட அதிகமாக இருந்தது. விவசாயத்தில், மீட்பு மிகவும் மெதுவாக தொடர்ந்தது, மேலும் 1960 கள் வரை போருக்கு முந்தைய உற்பத்தி நிலைகளை எட்டவில்லை. போருக்குப் பிந்தைய இடப்பெயர்வுகள் மற்றும் வறட்சியின் விளைவாக 1946-47 இல் ஏற்பட்ட பஞ்சம் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் உயிரிழப்புகளை உண்டாக்கியது.

கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இரகசிய பொலிஸ் மூலம் பயன்படுத்தப்பட்ட சர்வாதிகாரக் கட்டுப்பாட்டின் போருக்கு முந்தைய அமைப்பு விரைவாக மீண்டும் அமுல்படுத்தப்பட்டது. குருசேவ் உக்ரைனில் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் செயலாளராகத் தொடர்ந்தார். அவர் டிசெம்பர் 1949 இல் மொஸ்கோவில் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் செயலாளராக பதவி உயர்வு பெற்றார். உக்ரைனில் குருசேவ்வுக்குப் பின் லியோனிட் மெல்னிகோவ் அப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். நாஜி ஒத்துழைப்பாளர்கள், முன்னாள் ஜேர்மன் போர்க் கைதிகள் மற்றும் திருப்பி அனுப்பப்பட்ட அடிமைத் தொழிலாளர்கள், உக்ரைனிய "முதலாளித்துவ தேசியவாதிகள்" மற்றும் விசுவாசமின்மை என்று சந்தேகிக்கப்படும் மற்றவர்கள் - முக்கியமாக நூறாயிரக்கணக்கான மக்கள் - தூர வடக்கு மற்றும் சைபீரியாவில் உள்ள வதை முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர்.

நாஜி ஒத்துழைப்பாளர்கள். முன்னாள் ஜேர்மன் போர்க்கைதிகள் மற்றும் திருப்பி அனுப்பப்பட்ட அடிமைத் தொழிலாளர்கள், உக்ரைனிய "முதலாளித்துவ தேசியவாதிகள்" மற்றும் விசுவாசமின்மை என்று சந்தேகிக்கப்படும் மற்றவர்கள் - முக்கியமாக நூறாயிரக்கணக்கான மக்கள் - தூர வடக்கு மற்றும் சைபீரியாவில் உள்ள வதை முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர்.

உக்ரைனில் மேற்கத்தேய தாக்கங்களை அகற்றுவதற்கான ஒரு கடினமான கருத்தியல் பிரசாரம் புதுப்பிக்கப்பட்ட இயக்கத்துடன் கைகோர்த்துச் சென்றது. போர்க்கால ஆண்டுகளில் ஜேர்மனியர்களுக்கு எதிரான அணி திரட்டல் முயற்சியில் தேசபக்தி கருப்பொருட்கள் மற்றும் உணர்வுகளை வளர்க்க அனுமதிக்கப்பட்ட உக்ரைனிய எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் அறிஞர்கள், இப்போது உக்ரைனிய தேசியவாதத்தின் மீது குற்றம் சாட்டப்பட்டு, துன்புறுத்தலுக்கும் அடக்குமுறைக்கும் உள்ளாக்கப்பட்டனர்.

ஒரு மெல்லிய வேடமிடப்பட்ட யூத எதிர்ப்பு பிரச்சாரம் (anti-cosmopolitan campaign) யூதப்படுகொலையால் அழிக்கப்பட்ட ஒரு யூத சமூகத்தின் கலாசார நிறுவனங்களின் எஞ்சிய பகுதிகளையும் அழித்தது.

மேற்கு உக்ரைனின் சோவியத்மயமாக்கலுக்கு எதிரான நடவடிக்கை ஒரு நீண்ட மற்றும் வன்முறை செயல்முறையாகும். UPA தலைவர் ஷுகேவிச்சின் (Shukhevych) 1950 இல் கொல்லப்பட்டார். UPA 1950 களின் ஆரம்பம் வரை சோவியத் துருப்புக்களுக்கு எதிரான பயனுள்ள இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்தது.

UPA ஆயுதமேந்திய எதிர்ப்பு உள்ளூர் கிராமப்புற மக்களிடமிருந்து இரகசிய ஆதரவைப் பெற்றது. கிழக்கு உக்ரைனில் 1930 களை (பட்டினிச் சாவு) நினைவூட்டும் ஒரே நேரத்தில் கட்டாய கூட்டு இயக்கத்தால் கசப்புடன் இருந்த மக்கள் UPA இற்கு ஆதரவாக இருந்தார்கள்.

கிரேக்க கத்தோலிக்க தேவாலயங்கள் அகற்றப்பட்டன. இதனால் கிரேக்க கத்தோலிக்க தேவாலயம் சோவியத் ஆட்சியின் பல தசாப்தங்களில் ஒரு இரகசிய இருப்பை பராமரித்தது.



ஷுகேவிச்சின் (Shukhevych)



ஜார்ஜி மாலென்கோவ் சோவியத் ஒன்றியத் தலைவர் (1953-1953)

இதே நேரத்தில் கிரேக்க கத்தோலிக்க தேவாலயமானது, கட்சிக்காரர்களுக்கும், பொதுவாக உக்ரைனிய தேசியவாதத்திற்கும் உதவுவதாக ரஷ்யாவால் குற்றம் சாட்டப்பட்டது. ஸ்டாலினின் உத்தரவின் பேரில் - உக்ரைனிய கிரேக்க கத்தோலிக்கர்களை ரஷ்ய ஆர்த்தடாக்ஸ் தேவாலயங்களுடன் "மீண்டும் ஒன்றிணைக்க" அறிவித்தார். அதேமாதிரி டிரான்ஸ்கார்பதியாவில் (Transcarpathia) உள்ள கிரேக்க கத்தோலிக்க தேவாலயம் 1949 இல் அகற்றப்பட்டது. இதனால் கிரேக்க கத்தோலிக்க தேவாலயம் சோவியத் ஆட்சியின் பல தசாப்தங்களில் ஒரு இரகசிய இருப்பை பராமரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஒட்டுமொத்தமாக, கிளர்ச்சி மற்றும் தேசியவாத நடவடிக்கைகளை ஒடுக்குதல், மதத் துன்புறுத்தல் மற்றும் கூட்டுமயமாக்கல் தொடர்பாக மேற்கு உக்ரைனில் இருந்து சுமார் அரை மில்லியன் மக்கள் நாடு கடத்தப்பட்டனர்.

ஒட்டுமொத்தமாக. கிளர்ச்சி மற்றும் தேசியவாத நடவடிக்கைகளை ஒடுக்குதல் மதத்துன்புறுத்தல் மற்றும் கூட்டு மயமாக்கல் தொடர்பாக மேற்கு உக்ரைனில் இருந்து சுமார் அரை மில்லியன் மக்கள் நாடு கடத்தப்பட்டனர்.

### சோவியத் ஒன்றியத் தலைவர் குருசேவ் காலத்தில் சோவியத் உக்ரைன் (1953-1964)

1953 இல் ஸ்டாலினின் மரணத்திற்குப் பிறகு மொஸ்கோவில் அவரது போட்டியாளர்களை விட குருசேவ் முதன்மை பெற்றிருந்தார். நிகிதா செர்ஜியேவிச் குருசேவ் (Khrushchev) 1953 முதல் 1964 வரை சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் செயலாளராகவும், 1958 முதல் 1964 வரை அந்த நாட்டின் அமைச்சர்கள் குழுவின் தலைவராகவும் இருந்தார். அவரது ஆட்சியில், குருசேவ் ஸ்டாலினின் குற்றங்களை கண்டித்து கம்யூனிச உலகை திகைக்க வைத்தார். மேலும் அவரது முக்கிய கூட்டாளியான அனஸ்டாஸ் மிகோயனுடன் ஸ்டாலின் கொள்கையை மாற்றும் நடவடிக்கையைத் தொடங்கினார். இது குறிப்பாக உக்ரைனுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.



குருசேவ் (Khrushchev) சோவியத் ஒன்றியத் தலைவர் (1953-1964)

நிகிதா குருசேவ் உக்ரைனின் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராக இருந்தவர் என்பதால், அவருக்கு உக்ரேன் பற்றி சகலமும் தெரியும். அதனால் உக்ரைனை வளர்க்க முயன்றார். கட்சி மற்றும் அரசாங்கப் பதவிகளில் தனது சொந்த நம்பிக்கைக்குரிய நியமனம் பெற்றவர்களுடன் பணியாற்றினார், மேலும் உக்ரைனிய கலாசார உயரடுக்கினரை நன்கு அறிந்திருந்தார். ஸ்டாலினின் உக்ரைனிய எதிர்ப்பு சித்தப்பிரமைக்கு மாறாக, குருசேவ் கட்சிக் கொள்கையை கடைபிடித்து சோவியத் அரசுக்கு விசுவாசத்துடன் சேவை செய்த உக்ரைனியர்களுக்கு எதிராக மாறுபட்ட சில எண்ணங்களைக் கொண்டிருந்தார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழகத்துக்கு...

சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

குறித்த வயோதிப தம்பதிகளில் பர மேஸ்வரி என்ற வயோதிப தாய் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் சனிக் கிழமை இரவு உயிரிழந்ததாக தெரி விக்கப்படுகின்றது.

மன்னார் முருங்கன்பிட்டி பகுதி யைச் சேர்ந்த பரமேஸ்வரி மற்றும் சிவன் ஆகிய வயோதிபத் தம்பதிகள் இருவரும் கடந்த மாதம் 27ஆம் திகதி இலங்கையிலிருந்து படகு மூலம் தனுஷ்கோடிக்கு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7,285)

## இந்திய மீனவர்...

பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந் திய மீனவர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர்.

கடற்படையினர் முன்னெடுத்த சுற்றி வளைப்பின்போது, அவர்கள் நேற்று பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, மீன்பிடி நடவடிக்கை களுக்காக பயன்படுத்திய படகும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதானவர்கள் மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்ட தாக கடற்படை தெரிவித்துள்ளது. (4-7,33,60)

## 8 வரை...

டுள்ளது என கல்வி அமைச்சு அறி வித்துள்ளது.

கடந்த இரண்டு வாரங்களில் பாட சாலைகளின் அதிபர்கள், ஆசிரியர் கள் மற்றும் மாணவர்களின் வருகை யின் முன்னேற்றம் குறித்து ஆராய்ந்த பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டுள் ளது. (4-7)

## 10 வயது...

மடைந்து மூச்சு எடுக்க அவதிப்பட்ட போது தெல்லிப்பழை ஆதார வைத் தியசாலைக்கு அழைத்துச் செல்லப் பட்டார்.

எனினும் சிறுவன் உயிரிழந்துவிட் டார் என்று மருத்துவர்களால் தெரிவிக் கப்பட்டது.

வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபால சிங்கம் சம்பவம் தொடர்பில் விசா ரணை களை முன்னெடுத்தார்.

சிறுவனின் சடலம் உடற்கூற்றுப் பரி சோதனைக்காக யாழ்.போதனா வைத் தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (4-7,60)

## சர்வதேசத்தால்...

தேச நாணய நிதியத்திடம் வலியுறுத்தி யுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் கொழும்பு அலுவலகம் மூலமாக இது தொடர்பான கடிதம் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கு கைய ளிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் தலைவர் நீதியரசர் சி.வி. விக்னேஸ் வரன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத் தின் தலைவர் செல்வம் அடைக்கல நாதன், தமிழ் மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் சித்தார்த்தன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன் னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந் திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலை வர் சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறி காந்தா ஆகியோரே கூட்டாக இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர்.

இலங்கையின் தற்போதைய பொரு ளாதார நெருக்கடிகளுக்கு முறையான நிதிப் பொறுப்புக்கூறல் இல்லாமை மற்றும் குறுகிய நோக்குடைய அரசி யல் கொள்கைகளை பின்பற்றி வரு கின்றமை அடிப்படையில் காரணமாக அமைவதாக அந்தக் கடிதத்தில் கூறப் பட்டுள்ளது.

போரின் பின்னரும் இலங்கையின் முப்படைகளுக்கு அதிகளவிலான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள் ளமை குறித்த கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், பேரினவாத தேசிய கொள்கைகள் முழுமையாக மாற்றப் பட வேண்டும், புலம்பெயர் தமிழர்கள் முதலீடுகளைச் செய்வதற்கு உறுதிப் பாடுகள் தேவை, ராஜபக்ஷ குடும்பத் தினருக்கு நாட்டை வழிநடத்துவதற் கான தகுதிகள் இல்லை என்பனவும் குறித்த கடிதத்தில் கோடிட்டுக் காட் டப்பட்டுள்ளன.

இலங்கையின் இக்கட்டான நேரத் தில் உதவி செய்யத் தயாராக உள்ள அனைத்து பங்குதாரர்களுடனும் ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர் களாகிய தாம், கலந்துரையாடலில் ஈடுபடத் தயாராக உள்ளதாகவும் அறி வித்துள்ளனர். (4-7)

## 16 ஈழத்...

கத்தில் உள்ள சிறப்பு முகாமில் பல ஆண்டுகளாக சிறை வைக்கப்பட் டிருக்கும் தங்களை உடனடியாக விடு தலை செய்ய வேண்டும் என்பதை வலி யுறுத்தி ஈழத் தமிழர்கள் பல்வேறு வகையான போராட்டங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

அதனையடுத்து முதல்கட்டமாக அவர்களில் 16 பேரை விடுத்தலை செய்து உத்தரவிட்டிருக்கிறது தமிழக அரசு.

இதனை வரவேற்று மகிழ்ச்சி தெரி வித்துள்ள சிறப்பு முகாம் வாழ் ஈழத் தமிழர்கள் மீதமுள்ளவர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண் டும். ஏதேனும் வழக்குகள் நிலுவை யில் இருந்தால் அதனை விரைவில் முடித்து, முகாமில் இருந்த நாட்களை தண்டனை நாட்களாகக் கருதி அனை வரையும் விடுதலை செய்ய வேண்டும் என்று தமிழக அரசை கேட்டுக் கொண் டுள்ளனர். (4-7)

## நாட்டை கட்டி...

யிலான அரசாங்கம் உடனடியாக பதவி விலகுவதைத் தவிர வேறு மாற்று வழியில்லை எனவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவல கத்தில் நேற்று நடைபெற்ற கூட்ட மொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரி விக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற் கண்டவாறு தெரி வித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

இந்நாட்டில் தற்போது நிலவும் பிரச்சினைகளை 5 நாட்களில் 5 மாதங்களில் உட னடியாகத் தீர்க்க முடியாது.

இவ்வாறான பொய்களை நம்பி ஏமாற வேண்டாம் எனவும், இந் நாட்டு மக்களை தொடர்ந்தும் யாரே னும் ஏமாற்றவோ அல்லது தவறாக வழிநடத்தவோ முயற்சித்தால் அது துரதிர்ஷ்ட வசமான நிலை எனவும் அவர் தெரி வித்தார்.

இந்நாட்டை மீண்டும் கட்டி யெழுப்ப குறைந் தது ஐந்து வரு டங்கள் ஆகும். இதற்கப்பால் இந் நாட்டை கட்டி யெழுப்புவோம் எனக் கூறும்பேச்சு மாயையானது என வும் தெரிவித் தார். (4-7)

## மீண்டும் முடக்...

குத் தேவையான எரிபொருளைப் பெறுவதை உறுதி செய்வதற்காக ஒரு தற்காலிக முடக்கத்தை அரசாங்கம் பரிசீலித்து வருவதாக தகவல் வெளி யாகியுள்ளது.

இந்த விடயத்தை மேற்கோள் காட்டி ஆங்கில ஊடகம் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

எனினும் இந்த விவகாரத்தில் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை எனத் தெரி விக்கப்படுகிறது.

நாடு முழுவதிலும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வெளியே பாரிய வரிசைகள் காணப்படுவதால் அத்தியாவசிய சேவைகளால் எரிபொரு ளைப் பெற முடியவில்லை.

அத்துடன் ஜூலை 10ஆம் திக திக்கு பின்னர் புதிய எரிபொருள் கையி ருப்பு நாட்டிற்கு வரும் வரை நிலைமை தொடரும் என்று எதிர்பார்க்கப்படு கிறது. (4-7)

## எரிபொருள்...

பெற்றோல் - 1,414 மெற்றிக் தொன், பெற் றோல் 95 - 2,677 மெற்றிக் தொன், ஜெட் எரிபொருள் - 500 மெற்றிக் தொன், உலை எண்ணெய் - 2,900 மெற்றிக் தொன் ஆகியன தற்போதுள்ள எரி பொருள் கையிருப்புக்கள் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரி வித்துள்ளார். (4-7)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 03/07/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1283
மகரம் 6 6 9 3 0 1
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2022.07.03 சீட்டிழுப்பு இலக்கம் 3047
Z 10 22 71 77
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 03/07/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1153
I 24 23 55 69 80

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.07.03
சீட்டிழுப்பு இலக்கம் 114
மகரம் 09 31 52 57 மகரம்

மஹஜன சம்பத
திகதி 2022/07/03
சீட்டிழுப்பு இலக்கம் 4805
K 1 2 2 0 9 0

தன நிதானய
திகதி - 2022.07.03
சீட்டிழுப்பு இலக்கம் - 835
X 07 20 66 70

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1780 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.07.03 தினம் ஞாயிற்றுக்கிழமை
J 04 17 25 33
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,437,440/-

சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.07.03
சீட்டிழுப்பு இல : 3941
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,020,400/-
11 24 25 59 V

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 191
சீட்டிழுப்பு திகதி 2022.07.03 ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 06 30 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,202,620/-

ராசி
திகதி 2022-07-03
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,128,214/-
வெற்றி வாரம் 3492
19 33 36 49
ரூ. 5,056,480/-

12
J 20 12 32 54 69
சீட்டிழுப்பு வாரம் 956
2022.07.03
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 246,208,669/-

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1606
சீட்டிழுப்பு திகதி : 2022.07.03
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,321,940/-
09 35 36 76 F

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் **100%** பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 3536

**அருள்**
இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை.
இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி.
தொ.பே:- 076 443 1576 (C-4572)



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12041)

**076 825 7716** (ஆகாஸ்)



## Dimo வாகனம் வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம் – கிளிநொச்சிக்கு சென்று வருவதற்கு டிமோ பட்டா வாகனம் வாடகைக்கு தேவை.

தொடர்பு **076 097 3121**



## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**

✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/=
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
✓ வயது-22 தொடக்கம் 35
✓ தகுதி- பட்டதாரிகள் (C-4569)
(ஆங்கில அறிவு அவசியமானது)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் | 0777-068-777



## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்

✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4569)

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். | V2 TRAVELS

0777-068-777


## விழிநீர் அஞ்சலி



இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் வர்த்தகம் மற்றும் பொருளியல் பாடங்களைக் கற்பித்து எமது உயர்ச்சிக்கு காரணகர்த்தாவாக அமைந்த நல்லாசான்

அமரர் **காசிநாதர் அழகரத்தினம்**

அன்னை மடியில் 24.09.1942 | ஆண்டவன் அடியில் 02.07.2022

அவர்களுக்கு எமது விழிநீர் அஞ்சலிகளை காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

1992 உயர்தர பிரிவு மாணவர்கள்
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி

(C-4576)


ஐரோப்பிய நாடொன்றிற்கு செல்ல விருப்பமா?

## 5 நாட்களில் இலங்கையிலிருந்து பயணமாகலாம்

ஐரோப்பிய நாடுகளை Poland, Azerbaijan, Lithuania, Hungary போன்ற நாடுகளில் 6 மாத கல்வியின் பின்னர் நீங்கள் விரும்பிய நாட்டிற்கு செல்ல முடியும்.

♦ தகைமை தேவையில்லை
10 பேருக்கு மட்டுமே இவ் வாய்ப்பு

**Hot line : 071 071 6979** (12059)

Winstar Consultants Pvt Ltd
No.45, Vembadi Street,
Jaffna.

முக்கிய குறிப்பு :
முன்னனுமதி பெற்று நேரத்தினை உறுதிப்படுத்திய பின்னர் நேரில் வரவும்.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

வல்வெட்டித்துறையினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கடந்த 05.06.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

திருமதி
## தேவசிகாமணி தங்கமலர்



அவர்களின் சிவபேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 05.07.2022 செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் ஊறணி புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் அதே தினம் நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(12062) அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் எம்முடன் பல வழிகளிலும் துயர்பகிர்ந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இன்று வரை எமக்கு பல உதவிகளையும் செய்து தந்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மண்ணில் 26.07.1946 | விண்ணில் 05.06.2022

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.